விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 26 வெள்ளிக்கிழமை (10.03.2006) தொலைபேசி 222 3378 ஒலி 81

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## மட்டக்களப்பில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக் காலை ஏறாவூரிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த போது திருகோணமலை வீதியிலுள்ள வெள்ளைக்குட்டிச்சந்தியில் வைத்து 11 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த கோவிந்தன் விஜயராஜா (வயது-21) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இத் இத் தாக்குதலில் தம்பிமுத்து அருமைத்துரை (வயது-46),மாணிக்கம் (வயது-55) ஆகிய (12 ஆம் பக்கம் பார்க்க)


## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புதிய துணை வேந்தராக பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவித்தலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது. தற்போதைய துணைவேந்தராகவிருக்கும் பேராசிரியர் எஸ். மோகனதாஸின் பதவிக்காலம் நாளையுடன் முடிவடையும் நிலையில் புதிய துணை வேந்தராக கூல் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராதனை பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், மானிய ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றிய பேராசிரியர் கூல் எதிர்வரும் திங்கட்கிழமை துணைவேந்தராகப் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.



யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் தேர்வில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்களான (12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுத்துவக்கு வெடித்து இளம் குடும்பஸ்தர் பலி

(சாவகச்சேரி)

பன்றிக்கு இலக்கு வைத்த கட்டுத் துவக்கு வெடித்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை விடத்தல்பளைப் பகுதியில் இடம் பெற்றது.

இச் சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த இருபிள்ளைகளின் தந்தையான கனகரத்தினம் அமரதாசன் (வயது-32) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

நேற்று முன்தினம் மாலை வீட்டிலிருந்து தனது வயலுக்குச் சென்ற அவர் இரவு வரை வீடு திரும்பவில்லை. இதனையடுத்த நேற்றுக் காலை அவரைத் தேடிச்சென்றபோது பிரஸ்தாப நபர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான அனுசரணையாளர்களாக நோர்வேயே தொடர்ந்து இருக்கும்!


## ஜே.வி.பிக்கு அரசு பதில்

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் தொடர்ந்தும் நோர்வே அரசாங்கமே அனுசரணைப்பணியை மேற்கொள்ளும்.

அரசாங்கத்தின் இந்நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கான ஐரோப்பியத் தூதுவர் ஸ்ரிபன் இவன்ஸ் நேற்று விடைபெற்றுச் சென்றார். விடைபெற்றுச் செல்லும் இவருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நினைவுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## அமைச்சரவையில் மாற்றம் செய்ய ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை?

மகிந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் மாற்றமொன்றினை மேற்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர்களிடையே ஏற்பட்டுள்ள கசப்புணர்வினையடுத்து ஜனாதிபதி மகிந்த இம்முடிபினை மேற்கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வின் மூலமே நிரந்தரத் தீர்வு ஏற்படும்

எஸ்.பி.தெரிவிப்பு

இனவாத கொள்கை கொண்ட ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் கூறுவதைப் போல தமிழீழ விடுதலைப்புலிகளை முற்றாக கொன்றொழித்துவிட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வின் மூலமே தீர்வுகாணலாம் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகின்றோம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் எம்.பியுமான (12 ஆம் பக்கம் பார்க்க)

## 15 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடாத்த இடைக்காலத்தடை

(கொழும்பு)

எதிர்வரும் 30 ஆம் திகதி 15 உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடாத்துவதற்கு இடைக்கால தடை உத்தரவை நேற்று மேன்முறையீட்டு நீதி மன்றம் வழங்கியது.


இது குறித்து தேர்தல் ஆணையாளருக்கு நீதி மன்றம் அறிவித்துள்ளது. எல்பிட்டிய பிரதேச சபை,வத்தேகம நகரசபை,காலி மாநகரசபை ஆகியவற்றுடன் அக்கரைப்பற்று , அட்டாளைச்சேனை ,மாந்தை மேற்கு ,முசலி , நானாட்டான் ,நாவிதன் வெளி ,நிந்தவூர் , பொத்துவில் ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல் இம் மாதம் 30 ஆம் திகதி நடாத்துவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு இடைக் காலத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடை உத்தரவு காரணமாக கல்முனை, மன்னார்,புத்தளம் ஆகிய நகரசபைகளுக்கான உள்ளூராட்சித்தேர்தலுக்கும் மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலதடை விதித்துள்ளது. (ச-5)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





100 ஆவது போட்டி சிறப்புற வாழ்த்துகின்றோம்

# வடக்கின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி
# யாழ்.மத்திய கல்லூரி அணி 219 ஓட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

'வடக்கின் மாபெரும் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமான நூறாவது துடுப்பாட்டப் போட்டியில் முதலாவது நாள் ஆட்ட நேர முடிபில் சென்.ஜோன்ஸ் அணி விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு மிகவும் கோலாகலமாக ஆரம்பமான இப் போட்டியில் நாணயற்சுழற்சியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, மத்திய கல்லூரியணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதனடிபடையில் முதலாம் இனிங்ஸை ஆரம்பித்த மத்திய கல்லூரியணி 89.2 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மத்திய கல்லூரியின் பதிலணித் தலைவர் ஜே.டிலான் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும் பிரகாஷ் பேயன், அணித்தலைவர் மஹிபன், பிரசாத் ஆகியோர் முறையே 43,36,23 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிசார்பாக சிறப்பாகப் பந்து வீசிய நிரூ


டிலான்

பன் 61 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும் கஜரூபன் இரண்டு விக்கெட்டுக்களையும் சஞ்ஜீவன், சஜீந்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் கல்லூரியணி முதலாவது நாள் ஆட்ட நேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 10 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அ.கிரிசான் 3 ஓட்டங்களையும்,


நிரூபன்

ப.நேசவருமன் 5 ஓட்டங்களையும் பெற்றனர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

(ச-5)

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
PEPSI, 7up, MIRINDA,
போன்றவற்றின்
யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்
T.P: 222 2833, 222 7144
147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C- அ-262)

S.P.N.MOTORS
எஸ்.பி.என்.மோட்டர்ஸ்
நன்மதிப்பு பெற்ற பிறீடம், எல்.எம்.எல்.ஸ்கூட்டர் விற்பனையாளர்கள்
171,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C- அ-261)

துவிச்சக்கரவண்டிகள், T.V., டெக் வகைகள்,
றேடியோ வகைகள் அவற்றிற்கான
உதிரிப்பாகங்கள், அன்ரனா வகைகள்
போன்றவற்றை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
இ.சு.பேரம்பலம் சகநிறுவனம்
இல.50,52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 2988, 222 3096 Fax: 222 2368
(C- அ-263)

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு மாதங்களில் மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் அனர்த்தங்கள் அதிகரிக்கக் கூடும். எனவே பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வடகீழ் பருவக்காற்று படிப்படியாக குறைந்து வருவதாகவும் எதிர்வரும் வாரங்களில் இடைநிலைப் பருவக்காற்று ஏற்படக் கூடுமெனவும் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எஸ். காரியவசம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கடுமையான மின்னல் தாக்கத்தினால் உயிர்ச்சேதங்கள் மற்றும் உடைமைச் சேதங்கள் மார்ச் ,ஏப்ரல் மாதங்களில் அதிகமாக ஏற்படுமெனத் தெரிவிக்கப் படுகின்றது.

இந் தநிலையில் நாட்டின் சில பிரதேசங்களில் கடும் காற்று வீசக்கூடுமென்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்தின் பின்னர் மழை வீழ்ச்சியும் குறையக்கூடும். இதனால் சில பிரதேசங்களில் வரட்சி ஏற்படுமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21ஆம்திகதிக்குப் பின்னர் சூரியன் இலங்கைக்கு நேராக உச்சத்திற்கு வருவதினால் இலங்கையின் வெப்பநிலை அதிகரிக்குமென்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(த-9)

## பெண்கைதிகள் விடுதலை

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷவின் மனைவிசிராந்தி ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதற்கமைய சர்வதேச பெண்கள் நாளையொட்டி 20 பெண் கைதிகளை அரசாங்கம் விடுதலை செய்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

சர்வதேச பெண்கள் நாளையொட்டி பெண் கைதிகள் விடுதலை செய்யப்படுவது இதுவே முதல் முதல் முறை என பெண் சிறைத் துறை தலைமை அதிகாரி குமாரி ரட்ணவித தெரிவித்தார்.

(த)

## மனோகணேசனின் கருத்துக்கு ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் வாழும் தமிழ் மற்றும் சிங்களவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசியதாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சாட்டியுள்ளது.

ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசந்த வர்ணசிங்க இது தொடர்பில் கருத்துக் கூறுகையில்,

தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் இனத்தாலும் மொழியாலும் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மனோ கணேசன் தெரிவித்திருந்தார்.

வடக்கு-கிழக்கு தவிர்ந்த பகுதியிலுள்ள அடிப்படைப் பிரச்சினைகள் அனைவருக்கும் பொதுவானவையே. மொழி இன வேறுபாடு எதுவும் இல்லை.

மனோ கணேசனின் பேச்சுக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவாது, பிரச்சினையை வலுப்படுத்தவே உதவும் என்றார்.

(த)

## விண்ணப்பம் கோரல்

வெளிநாட்டில் பயிற்சி நெறிக்காக வடகிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கழிவு நீர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை கொரியாவிலும் திண்மக் கழிவு தொடர்பிலான பயிற்சி யூலை மாதம் 4ஆம் திகதிமுதல் 28ஆம் திகதி வரை தாய்லாந்திலும் நீர்விநியோகம் பராமரிப்பு தொடர்பான பயிற்சி நெறி யூலை 22ஆம்திகதி முதல் 29ஆம் திகதி வரை ஜப்பானிலும் நடைபெறவுள்ளது.

(த-21)

# ஜெனீவாவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை குழப்பும் விதமாக செயற்படுகின்றது அரசு

## தயா மோகன் குற்றச்சாட்டு

உங்கள் பிள்ளைகளின் கனவு நனவாகும் வரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உயிர்மூச்சு நின்று விடாது. அந்தக் கனவை நனவாக்கவே தலைவர் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாட்டுப்பற்றாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த் தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 17900 மாவீரர்களையும் நாட்டுப்பற்றாளர்களையும் இழந்திருக்கிறோம். அவர்கள் எந்த நோக்கத்திற்காக தங்களின் உயிரை அர்ப்பணித்தார்களோ அவர்களது கனவு நனவாகும். அந்தக் கனவை நனவாக்கவே தலைவர் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

எங்களை இன்று உலகம் அங்கீகரிக்கின்றது. தமிழர்கள் பூர்வீக இனம், பண்டைய இனம் என உலகம் அங்கீகரிப்பதற்கு விடுதலைப் போராட்டத்தில் உங்களின் பிள்ளைகளின் அர்ப்பணிப்பும் தியாகமுமே காரணமாகும். அவர்கள் போற்றுதற்குரியவர்கள்.

இன்றைய அரசியல் நிலைமைகளை நோக்குவோமானால், ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுக்கள் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை குழப்பும் வகையில் தான் அரசும், இனவாத சக்திகளும் செயற்பட்டு வருகின்றன. எனவே சிங்கள அரசு தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் என்பதற்கு எவ்வித நம்பிக்கையுமில்லை.

எனவே, மாவீரர்கள், நாட்டுப்பற்றாளர் எதனை இலட்சியமாகக் கொண்டு தங்களின் உயிர்களை தியாகம் செய்தார்களோ அதனை அடைவதற்காக நாங்களும் தொடர்ந்து பாடுபடுவோம். அவர்களின் கன்வு நனவாகும் என்றார். (தி)

## புதிய நியமனம்

(மருதங்கேணி)

புலோலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் வடமாகாண அஞ்சல் திணைக்களத்தின் புதிய பிராந்திய நிர்வாக அலுவலராக அஞ்சல் மா அதிபரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். இதற்கு முன் இவர் இத் திணைக்களத்தில் அஞ்சல் கணக்கு பரிசோதகராக கடந்த 5 வருடத்திற்கு மேலாக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (து-35)

## தீக்குளிப்பு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம், சிவ உதய நாகபூஷணி அம்பாள் ஆலய அலங்கார உற்சவ மாசி மக தீக்குளிப்பு எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இடம் பெறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை திருவூஞ்சல் நிகழ்வு இடம்பெறும். (க)

## அடுத்த சுற்றுப் பேச்சில்

# சர்வ கட்சிப் பிரதிநிதிகளும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான இரண்டாம் கட்ட ஜெனீவா பேச்சுவார்த்தையில் சர்வ கட்சிப் பிரதிநிதிகளை இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அரச பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அமைச்சரைச் சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளை அரசாங்கத்தால் மட்டும் முன்னெடுக்க முடியாது என்பதனை ஜனாதிபதி உணர்ந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அனைத்துக் கட்சிகளையும் இணைப்பதில் வெற்றி கண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (த-9)

## வெண்கள் மீதான

# துஷ்பிரயோகங்களை தடுக்கும் பொறுப்பு ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்குமுள்ளது

(கொழும்பு)

பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்களை தடுத்து நிறுத்தும் பொறுப்பு ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலுமுள்ள பெண்கள் பிரிவைச் சார்ந்ததாகுமென்று கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினம் சம்பந்தமாக நடைபெற்ற நிகழ்வொன்றிலே அவர் இதனைக் கூறினார்.

பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகம் பற்றி சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு பெண்கள் மத்தியில் சட்ட அறிவு பெருமளவு இல்லாதது தடையாகவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த-7)

## ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

2006ஆம் ஆண்டு முதலாம் இலக்க சம்பள முரண்பாடுகளை நீக்கும் சுற்று நிருபத்தை திருத்துமாறு கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

இதில் பல தொழில் சங்கங்கள் கலந்து கொண்டன. நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் இவ் ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

இந்த சுற்று நிருபம் அமுல்படுத்தப் படுவதன் மூலம் தொழிலாளர்கள் பாதிப் படைவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (த-4)

# பேரிடர் நிகழ்வுகளை தடுக்க நடவடிக்கை

# தென்மராட்சி பிரதேச செயலர் அறிவிப்பு

(சாவகச்சேரி)

கடந்த சுனாமி பேரழிவின் போது உடனடியாக செயற்படக்கூடிய விதமாக பாடசாலைகள் தயார் நிலையில் இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் சுனாமி பேரலை, புயற்காற்று, வெள்ளப்பெருக்கு, பாரியளவான தொற்றுநோய் பரவல் மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற ஆபத்துக்கள் என்பனவற்றின் போது பாடசாலை மட்டத்திலே நிவாரண சேவைகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பான பலதரப்புகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கும் தென்மராட்சி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அதற்குப் பொறுப்பாக பாடசாலை மட்டத்தில் குழுக்களை ஏற்படுத்தி அதற்கு தலைவர், செயலாளர் ஆகியோரை நியமித்து அக்குழுவின் ஊடாக இவ்வாறான பேரிடர்கள் நிகழவிருப்பதாக உத்தியோகபூர்வமாக கிடைக்கப்பெறும் தகவல்களை தெரியப்படுத்தி பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது இக்குழுவின் செயற்பாடாகும்.

இது தொடர்பாக மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (து-108)

# தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பில் கல்வியமைச்சில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுவோருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவது தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தலைமையில் கல்வியமைச்சில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தையில் 37 தொண்டர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்களது பிரச்சினைகளை முன்வைத்துள்ளனர்.

அவர்களின் பிரச்சினைகளை செவிமடுத்த கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரட்ண ஹேவகேத 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் மூன்று வருடகால சேவையும், உயர்தரத்தில் மூன்று பாடங்களுக்கான சித்தியும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் நிரந்தர நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப் படும் என்று உறுதியளித்துள்ளதாக சமூக சேவைகள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று வார காலத்தினுள் இப்பிரச்சினை குறித்து தான் ஒரு முடிவினைத் தெரிவிப்பதாகவும் கல்வியமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார். (த-4)

# தேர்தல் வழிமுறைகளை மாற்ற அரசாங்கம் எண்ணியுள்ளது

(கொழும்பு)

மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பன சம்பந்தமான தற்போதைய தேர்தல் வழிமுறைகளை மாற்றுவது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்ததாக ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

தற்போதைய வழிமுறைகள் செலவு கூடியவையென்றும், ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முக்கியம் அளிக்காதவை, மக்கள் மத்தியில் அவை பிரபல்யம் பெற்றிருக்கவில்லையென்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர்- மஹிந்த சிந்தனை மூலம் உள்ளூராட்சித் துறையில் விழிப்புணர்ச்சியும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டுள்ளதென்றும் குறிப்பிட்டார். (த-7)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேசசபையின் அனுசரணையுடன் அப்பகுதி சுகாதார பரிசோதகரின் முன்னிலையில் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு நஞ்சூட்டி அழிக்கப்பட்டன. (த-35)

# ஒரு கிராமத்தின் பலம் அங்குள்ள பாடசாலைகளிலேயே தங்கியுள்ளது

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்

(கோப்பாய்)

ஒரு கிராமத்தின் பலமும் வலுவும் அக்கிராமத்துப் பாடசாலைகளிலேயே தங்கியுள்ளது. எனவே அப்பாடசாலைகளின் செயற்பாட்டை முழுமையடையச் செய்வதில் முதுகெலும்பாகத் திகழவேண்டியது கிராமத்துச் சமூகமேயாகும். இதற்குப் பக்கபலமாக அனுசரணை வழங்கக் கல்வித் திணைக்களம் ஒருபோதும் பின்னிற்க மாட்டாது என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் நீர்வேலி சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் எஸ்.நவரத்தினராசவேல் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வளப்பற்றாக்குறையுடனிருந்த பாடசாலைகள் தற்போது ஓரளவுக்கு வளத் தேவைகளை நிறைவுசெய்து தலைநிமிர்ந்து நிற்கின்றன. எனவே இப்பாடசாலைகளில் தமது பிள்ளைகளை இணைத்து பாடசாலையை வலுவடையச் செய்தல் வேண்டும். இது எதிர்காலத்தில் பாடசாலை வளர்ச்சிக்கு உந்துசக்தியாக அமையும்.

இதைவிடப் பிள்ளைநேயப் பாடசாலை என்ற வகையில் சில பின்தங்கிய பாடசாலைகள் மேம்பாடடைந்து வருகின்றன. இச்செயற்பாட்டில் கிராம சேவையாளர்களும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பங்காளிகளாகி வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் பாடசாலைகளை மேலும் வலுவூட்டும் என்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் உரையாற்றுகையில்,

கோப்பாய்க் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்று தொடக்கம் ஒன்பதுவரை கல்வி பயில்கின்ற மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதனால் இப்பகுதியிலுள்ள அனைத்து மாணவர்களும் நன்மை பெறவுள்ளார்கள். அத்துடன் ஆசிரியர்களும் நன்மை பெறவுள்ளார்கள். பாடசாலைகள் ஒருமணி நேரம் தாமதித்து 3.45 மணிக்கே மூடப்படும். இதனால் கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளையும் சமூகம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். (த-79)

## ஆன்மீக சொற்பொழிவு

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிற் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பூஜை நடைபெற்று முடிந்த பின் ஆன்மீகம் என்னும் பொருள் பற்றி ஆசிரியை திருமதி கமலேந்திரன் கீதாமணி ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார்.

ஆன்மீக நிகழ்வை தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (து-35)

# இன்று ஒரு தகவல்

## என்ன எதிர் பார்க்கிறார்கள்

ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவரது உறவினர் ஒருவர் ஒரு நேர்முகத் தேர்விற்குப் போயிருந் தாராம். மிகவும் பொறுப்பாகவும், கவனமாகவும் செயற் பட வேண்டிய பதவிக்கான நேர்முகத்தேர்வு அது. இவரிடம் அதிக சான்றிதழ்கள் இருந்தது. நேர்முகத் தேர்வில் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் மிகவும் சரியாகப் பதில் சொல்லிவிட்டார். இருந்தாலும் அந்த நேர் முகத் தேர்வில் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

என்ன காரணம் என்று பின்பு விசாரித்த போதுதான் விடயம் புரிந்ததாம். அந்த நேர்முகத் தேர்வில் இவர் நடந்து கொண்ட முறையில் சில தவறு நடந்து விட்ட தாம். முக்கியமாக இரண்டு தவறுகள். இன்று அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டு முடிப்ப தற்குள் இவர் பதில் சொல்ல ஆரம்பித்துவிட்டாராம். இரண்டாவது இவர் நாற்காலியில் தாராளமாக உட்காராமல் நாற்காலி முனையில் உட்கார்ந்திருந்தாராம். இந்த இரண்டு வித மான செயற்பாடுகளும் இவர் அவசரப்படுபவர்... பதற் றப்படுபவர் என்பதற்கான அடையாளங்களாம். பார்க் கப்போகும் வேலைக்கு அவசரம், பதற்றம் இரண்டும் இருக்கக் கூடாதாம். அதனால் சான்றிதழ் இருந்தும் அந்த வேலைவாய்ப்பு இவருக்குக் கிடைக்கவில்லை.

வேலை கொடுப்பவர்கள் நம்மிடமிருந்து என்ன எதிர் பார்க் கின்றனர் என்பதைத் தெரிந்து வைத்துக் கொள் வது நல்லது. அதை ஒவ்வொன்றாக இப்போது பார்க் கலாம்.முதலில் தொடர்பு கொள்ளும் திறமை. நீங்கள் நினைப்பதை அழகாக தொகுத்து வகைப்படுத்தி சொல் லத் தெரிகிறதா என்று பார்ப்பார்கள். உங்கள் திட்டங் களை அடுத்தவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் வெளிப்படுத்த உங்களால் முடிகிறதா என்று பார்ப்பார்கள். இதற்கு என்ன செய்வது? குழப்பமில்லாமல் சிந்திக்க வேண்டும். குழப்ப மில்லாமல் பேசவேண்டும்.

இரண்டாவது விடயம் புத்திசாலித்தனம்... Intelligence ஏற்றுக் கொள்ளப் போகும் வேலையை நல்லவிதமாக செய்ய முடியுமா உங்களால்? அதை எந்தெந்த வழியில் செய்யலாம் என்பதை உங் களால் தீர்மானிக்கமுடியுமா? அந்த வேலைக்கான புதுப்புது யோச னைகளை உங்களால் சொல்லமுடியுமா? என்று பார்ப்பார்கள்.

மூன்றாவது தன்னம்பிக்கை. Selfconfidenc உங்களுக்கு இருக்கிறதா என்று பார்ப்பார்கள். எந்த சூழ் நிலையை யும் சமாளிக்க வேண்டும். எப்படிப்பட்ட மனிதர்களையும் சமாளிக்கும் தைரியம் வேண்டும். அடுத்தவர்களை நமக்குச் சாதகமாக திருப்பக் கூடிய தன்னம்பிக்கை வேண்டும். நான்காவது பொறுப்புக்களை முன் வந்து ஏற்றுக்கொள் ளுதல். பொறுப்புக்களிலிருந்து நழுவிப்போக ஆசைப் படாமல் செய்து முடிக்கவேண்டும்.

ஐந்தாவது முன்வருதல். வேலையின் முக்கியத்துவம் உணர்ந்து அதற்குத் தகுந்த நடவடிக்கைகளைத் தயங் காமல் எடுக்க முன் வரவேண்டும். ஆறாவது தலைமைத் துவம். நான்குபேருக்குத் தலை மைதாங்கி நல்ல விதத்தில் நடந்து கொள்ளத் தெரிகிறதா? ஏழாவது கற்பனைத்திறன். சில பிரச்சினைகள் வரக்கூடும் என்று முன் கூட் டியே யூகித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் திறமை உண்டா என்று பார்ப்பார்கள்.

எட்டாவது வளைந்து கொடுத்தல் சூழ் நிலைக் குத்தகுந்த மாதிரி... மாற்றங்களுக்குத் தகுந்த மாதிரி அனுசரித்து நடந்து கொள்ளத் தெரிகின்றதா என்று பார்ப்பார்கள் அடுத்து திறமை களை வெளிக்கொணரும் திறமை அடுத்தவர்களிடம் இருக்கும் திறமையைக் கண்டுபிடித்து அதை நல்ல விதத்தில் ஊக்கப் படுத்தி பயன்படுத்தத் தெரியுமா என்று பார்ப்பார்கள். அடுத்தது சுய அறிவு... அடுத்தவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைக் கிறார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா என்பது முக்கியம். அடுத்தது போட்டி மனப்பான்மை அடுத்தவர்களை ஒப்பிட் டுப் பார்த்து அதைவிட ஒரு படி மேலே வரவேண்டும் என்ற குணம் வரவேண்டும்

அடுத்தது குறிக்கோளை வெல்லுதல் குறிக்கோளை சவா லாக எடுத்துக் கொண்டு அதை அடையவேண்டும். அடுத்து வேறு பட்ட திறமைகள் பதவிக்கு ஏற்ற திற மைகள் தவிர மற்ற திற மைகள் எதுவும் உண்டா என் பது முக்கியம். நமக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் நம்மிடமிருந்து இவ் வளவையும் எதிர்பார்ப்பார்கள் அதற்குத் தகுந்தமாதிரி நம்மை நாமே தயார் படுத் திக்கொள்ளவேண்டும்.

எனக்கு வேண்டப்பட்ட ஒருவர் ஒரு நேர்முகத் தேர் வுக்குப் போய்விட்டு வந்தார்... "எப்படி இருந்தது இன்டர் வியூ?" என்று விசாரித்தேன். "நான் போனேன் அவர் கேட்ட எல்லா கேள்விக் கும் அவர் எதிர்பார்த்தது போலவே எல்லா பதிலையும் சொன்னேன். கடைசியாக நான் எதிர்பார்க் காத ஒரு தகவலை அவர் சொன்னார்" என்றார். 'என்ன?' என்று கேட்டேன் "அவரும் என்னை மாதிரியே நேர்முகத் தேர்விற்கு வந்தவர்தானாம்... சும்மா என்னைக் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தாராம்" என்றார்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# ஆணாதிக்க சிந்தனையை முறியடிக்கும் செயற்பாடு ஆண்களுக்கு எதிரானதல்ல

(கிளிநொச்சி)

ஆணாதிக்க சிந்தனையை முறியடிக்கும் செயற்பா டேயன்றி,ஆண்களுக்கு எதிரான செயற்பாடாக கருதி விடக் கூடாது. இன்று எமது தாயகத்தில் இடம்பெறு கின்ற பெண்கள் எழுச்சிநாள் செயற்பாடுகளுக்கு



பெரும்பாலான ஆண் சகோ தரர்கள் தமது ஆதரவை யும், ஒத்துழைப்பையும் வழங்கியிருப்பது மகிழ்ச்சிக் குரியது இவ்வாறு விடு தலைப் புலிகளின் சமாதான செய லகத்தைச் சேர்ந்த தமிழ்விழி தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சி பண் பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்துலகப் பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது வாழ்க்கையோட்டத்தில் குடும்ப உறவுக் களுடன் நாம் இணைந்து வாழுகின்றோம். பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் வெவ் வேறு கோணத்தில் சுதந்திரம் வழங்கப்படுகின்றது இந்த நிலை மாறவேண்டும் எனவும் தனதுரையில் தமிழ்விழி கேட்டுக்கொண்டார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மகளிர் பொறுப்பாளர் பூவிழி உரையாற்றும் போது எமது தாயகப் பெண்கள் உரிமைக்கான போராட்டத்தில் பல சாதனைகளை படைத்திருக்கின்றார்கள். விடுதலை பற்றி ஆண்கள் மத்தியில் மாற்றம் பெறும் போதுதான் இது முழுமை யாக சாத்தியமாகும் என்றார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மு.ப1 0.30மணிக்கு ஆரம்பமான நிகழ் விற்கு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பாளர் தலைவி திருமதி தேவாம்பிகை காசிநாதன் தலைமை தாங்கி னார்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சி பேரவை செய லாளர் பசுபதிப்பிள்ளை உட்பட பலர் நிகழ்வில் உரை யாற்றினர். கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் அருளும் பெருந்திரளான பாட சாலை மாணவிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, தேசத்தின் அனைத்து மாவட்டங் களில் வாழும் பெண்களும் எழுச்சி கொண்டு தனித்து தீர்மானம் எடுக்கின்ற பெண்களாக மாறும் காலம் தொலைவிலில்லை இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பு அனைத்துலக பெண்கள் நாளை ஒட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

தேசமெங்கும் கடைப்பிடிக்கப்படும் இந்நாளில் தமிழ்பெண்கள் ஆகிய நாமும் மண் விடுதலைக்கும் பெண் விடுதலைக்குமாய் பாடுபடவேண்டும். தலைவன் காலத்தில் எமக்கும் மண்விடுதலையோடு கூடிய பெண் விடுதலை கிடைக்கும் சமூக ஏற்றத்தாழ்வுகள் இல் லாது போகும்.

இன்று எங்கள் தாயகமெங்கும் வாழும் பெண்கள் அச்சத்தோடு தமது அன்றாட வாழ்வை எதிர்நோக் குகின்றனர். பேரினவாதிகளின் அரச கூலிப்படை களாலும், ஒட்டுக்குழுக்களாலும் எத்தனை ஆயிரம் பெண்கள் பாலியல்வதைக்குட்படுத்தப்பட்டு படு கொலை செய்யப் பட்டனர். உலகத்திற்கு சமாதானம் என்று கூறிக் கொண்டு ஆட்சிக்கு வரும் அரசுகள் இத னைத்தான் செய்கின்றன. இந்த நிலையை ஒழிக்க வேண்டும்.

பகைப்படைகளை துரத்த வேண்டும். எனவே எங்கள் தாயகத்தின் வீரப் பெண்களே விவேகப் பெண் களே மூச்சாய் எழுங்கள் வீச்சாய்ச் சென்று பகை வீட்டை அழியுங்கள் நாங்கள் பாரதி பாடிய பிரபாகரப் பெண் கள் என்று துணிவுடன் நில்லுங்கள் நாம் அரசியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் பொருளியல் ரீதி யாகவும் சமூகத்தில் அதியுன்னத மாற்றத்தை உண்டு பண்ணி சாதனைப் பெண்களாக வலம் வருவோம்.

ஆண்களோடு பெண்களாய் எங்கள் சுதந்திர தேசத் தில் வலம் வருவோம் . உலகப் பெண்களுக்கு முன்னு தாரணமாக வாழுவோம். எந்தவொரு நாட்டிலும் இல் லாத சாதனைகளைப் படைத்த பெண்கள் குலம் நாம் காற்றிலும் தரையிலும் நீரிலும் சாதனை படைக்கும் வீரப் பெண்கள் காலமிது எங்கள் தேசத்தில் பிறக்கும் ஒவ் வொரு பெண் குழந்தையும் பல்துறை ஆற்றல் கொண்ட வீரப்பெண்ணாகத்தான் எங்கள் தேசத்தில் வலம் வரு வார் என்பதில் சந்தேகமில்லை எனவும் அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# அறிக்கை கையளிப்பு

நுரைச்சோலை மின் திட்டத்தால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் குறித்த அறிக்கை மத்திய சுற்றுச் சூழல் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் திட்ட இயக்குநர் பி. எம். கேரத் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மின் சக்தித்துறையமைச்சர் ஜோன் செனவிரட்ண நியமித்திருந்த சிறப்புக்குழுவினர் நுரைச்சோலை மின் திட்டத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புக் களை எப்படிக்குறைப்பது என்ற பரிந்துரைகளையும் தெரிவித்துள்ளனர். (த-9)

# அவசர கலந்துரையாடல்

பறவைக்காய்ச்சல் ஏற்படுவதைத் தடுக்கும் முக மாக கோழிப்பண்ணையாளர்களுக்கான அவசர மான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக் கிழமை முற்பகல் 9.30மணிக்கு மந்திகையில் உள்ள பருத் தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை யில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பருத்தித்துறை, கர வெட்டி கால்நடை வைத்திய அதிகாரிகள் மற்றும் பருத் தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர் என தெரிவிக்கப் படுகிறது. (த-35)

# மகளிர் தின நிகழ்வு









(யாழ்ப்பாணம்)

யாழ் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் மகளிர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் 4.00 மணியளவில் இடம்பெற்றது.

திருமறைக்கலாமன்ற மகளிர் அவைத் தலைவி றெஜிலூசியா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உத்தியோகத்தர்கள் செல்வி கதிரவேலு உதயா, சின்னையா சித்திரா, திருமறைக் கலாமன்ற இயக்குனர் ஜே.ஜோன்சன் ராஜ் குமார் ஆகியோரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் கருத்துரை, குழுப்பாடல், சிறப்புரை என்பன இடம்பெற்றன. (த-132, 133)

# பாரிய சீர்குலைவில் அரசின் பொருளாதாரம் பொருளியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை!

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் பாரிய சீர்குலைவுகளுக்குக் காத்திருப்பதாக பொருளியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்த பின்பு பொருட்களின் விலையேற்றம் பாரிய அளவில் இருக்கும் என்றும், இதனால் நாட்டினது பொருளாதாரம் சீர்குலையும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

நாட்டின் தொடருந்து, அஞ்சல், மின்துறை பெற்றோலிய நிறுவனம் போக்குவரத்து சபைகளுக்கு அரசாங்கம் செலுத்த வேண்டிய தொகை மட்டும் ரூ.70 பில்லியனாக இருக்கிறது. இத் தொகையை அரசாங்கம் செலுத்தவில்லையெனில், அந்த நிறுவனங்கள் அனைத்துமே பாரிய சரிவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் ஆகையால் அந்நிறுவனங்கள் தொடர்பானவற்றின் விலையேற்றமும் கட்டண உயர்வும் தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் எச் சரிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண உயர்வை அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது ஒரு நபர் ரூ.1000க்கும் அதிகமாக மின் கட்டணத்தை செலுத்த நேரிடும் நிலைமை உள்ளது. இத்தகைய சூழலினால் அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாய் மதிப்பும் குறைந்து விடும் நிலையுள்ளது.

இத்தகைய பொருளாதாரச் சூழலில் அனைத்து இறக்குமதி பொருட்களின் மீதான வரி உயர்வானது 15வீதம் இருக் கும் என்றும் கூறப்படுகிறது. வங்கிசாரா நிறுவனங்களிடமிருந்து 1 பில்லியன் அமெரிக்க டொலரை ஏலவே கடன் வாங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளமை மேலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் சர்க்கரையின் விலை கிலோவுக்கு ரூ.48 லிருந்து ரூ.60 ஆக அதிகரித்திருக்கிறது. எரிபொருள் மற்றும் போக்குவரத்துக் கட்டண உயர்வுகளும் தவிர்க்க இயலாததாகியுள்ளது என்று பொருளியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். (து)

# இடமாற்றம்

(நல்லூர்)

கொக்குவில் அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் அதிபராகக் கடமையாற்றிய எஸ். துரைசிங்கம் வடபிரதேச பிரதி அஞ்சல் மா அதிபர் நாயகத்தின் அலுவலகத்திற்கு இவ் வாரம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு யாழ். பிரதம தபாலகத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றிய எஸ். சற்குணலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் தபாலகத்தில் தபால் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய என். ஆனந்தராசா கிளிநொச்சி தபாலகத்தில் தபால் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய எஸ். அன்பரசன் ஆகியோரும் யாழ். பிரதம தபாலகத்துக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர். (த-134)

# ஊழல் தொடர்பில் கைதாகும் உத்தியோகத்தர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்படும் அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளுடன் ஒப்பிடும் போது கணிசமான அதிகரிப்பு தென்படுவதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அறிக்கையொன்று சுட்டிக்காட்டுகின்றது.

2004ஆம் ஆண்டிற்கான அறிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப் பட்டது. இந்த அறிக்கையின் பிரகாரம் அந்த ஆண்டில் மாத்திரம் இலஞ்ச ஊழல் தொடர்பாக 90பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் பொலிஸ் திணைக் களத் தைச் சேர்ந்த 48 பேரும் அடங்குகின்றனர். இராணுவம், வனஜீவராசிகள் தொழில் கூட்டுறவுத்திணைக்களங்கள், சமுர்த்தி அதிகார சபை, நீதியமைச்சின் பொறுப்பில் இயங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இலஞ்ச ஊழல் மோசடிகள் கூடுதலாக இடம்பெற்றுள்ளதாகத் தெரிகின்றது.

போதிய அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் முறைப்பாடுகளை துரிதமாக விசாரிக்க முடியாதுள்ளது என்ற விடயமும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போலி முறைப்பாடுகளும் அதிக எண்ணிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதினால் திணைக்களத்தின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (த-9)

## கொழும்பு மாநகர சபைத்தேர்தல்

# தேர்தல் ஆணையாளரின் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைத் தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் தாக்கல் செய்திருந்த விசேட மனுவொன்று உயர் நீதிமன்றத்தினால் கடந்த திங்கட்கிழமை நிராகரிக்கப்பட்டது.

கொழும்பு மாநகர சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலினை 30ஆம் திகதி நடத்தாமல் இருக்கும் வகையில் தேர்தல்கள் ஆணையாளருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவினை எதிர்த்தே தேர்தல் ஆணையாளர் இம் மனுவினை தாக்கல்செய்திருந்தார்.

கடந்த மாதம் 24ஆம் திகதி தேர்தல் ஆணையாளருக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்ததன் மூலம் கொழும்பு மாநகர சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலினை மேன்முறையீட்டு நீதிமன்றம் இடை நிறுத்தியிருந்தது.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியினால் கொழும்பு மாநகரசபைத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவை தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி நிராகரிப்பதற்கு எடுத்த முடிவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலத்தடையுத்தரவின் மூலம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த இடைக்காலத் தடையுத்தரவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் விசேட மேன் முறையீட்டு மனுவொன்றினை தாக் கல் செய்த தேர்தல்கள் ஆணையாளர் ஏற்கனவே திட்டமிட்டபடி இம்மாதம் 30ஆம் திகதி தேர்தலை நடாத்துவதற்கு அனுமதி வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையுத்தரவினை இரத்துச் செய்யுமாறு கோரியிருந்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவினை மாற்றும் அளவுக்குத் தேவையான காரணங்கள் முன்வைக் கப்படவில்லையென்று தேர்தல்கள் ஆணையாளரின் மனுவினை பரிசீலனைசெய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

கலாநிதி சிறானி பண்டாரநாயக்க, ரி. பி.வீரசூரிய, நிமால் திஸாநாயக்க ஆகிய நீதியரசர்கள் இம்மனுவினை பரிசீலனை செய்தார்கள். (து-4)

# பாதுகாப்புப் படையினரின் சமூக நலன் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பீ.ஏ சந்திரசிறியின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கமைய 51ஆவது சேனையகத்தின் கீழ்நிலை கொண்டுள்ள 512வது படையணியினால் அப் பிரதேசத்தில் சன சமூக, நலன்புரிவேலைத் திட்டங்கள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்.போதனா வைத்திய சாலையை துப்புரவு செய்த படையினர், வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் சுமார் 275 சிறுவர், சிறுமியர்களுக்கு இனிப்பு, தீன் பண்டங்களை வழங்கியுள்ளனர். பாதுகாப்புப்பயையினரின் இந்த நலன் புரிசனசமூக திட்டங்கள் குறித்து வைத்திய சாலை பணிப்பாளர் டாக்டர் ஞான சோதிபடையினருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பா ணத்தில் மெதடிஸ்ட் சிறுவர் இல்லத்தைத் துப்புரவு செய்த படையினர் அங்கு நிலை கொண் டுள்ள சிறுவர்களுக்கு மதிய உணவையும் வழங்கியுள்ளனர். இந்த நிகழ்வில் அச் சிறு வர் இல்லத்தின் பொறுப்பாளர் அருட்தந்தை எஸ். கதிர்காமருடன் 512ஆவது படையணித்தளபதி மற்றும் படையணியின் உயர் அதிகாரிகள், படைப்பிரிவுகளின் கட்டளை அதி காரிகள் இராணுவ சிப்பாய்க ளும்கலந்துகொண்டனர். (து)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

ரஷ்ய அரசாங்கம் பொறியியல் துறைக்கான முன்னோடி பட்டப்படிப்பு புலமைப் பரிசில்களை எமது நாட்டு மாணவர்களுக்கு வழங்கவுள்ளது. புலமைப் பரிசில்களைப் பெறுவதற்கு தகுதியுடைய மாணவர்களிடமிருந்து தற்போது விண்ணப்பங்கள் கோரப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த முறையின் கீழ் 7 புலமைப்பரிசில் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இன்று கொழும்பு-7 வாட்பிளேஸ், இலக்கம் 16 இல் அமைந்துள்ள கல்வியமைச்சில் இது தொடர்பான விபரங்களையும் விண்ணப்ப படிவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கூறப்படுகிறது. (த-7)

## சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தும்

# விசேட செயற்திட்டம் ஆரம்பிக்க தேசிய வைத்திய அமைச்சு முடிவு

(கொழும்பு)

சிறுநீரக நோயைக்கட்டுப்படுத்தும் விசேட செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேசிய வைத்திய அமைச்சு தீர்மானித்துள் ளது.

இது தொடர்பாக பாரம்பரிய ஆயுள்வேத வைத்தியர்களையும், மேலைத்தேய வைத்தியர்களையும் ஒன்றிணைக்கவுள்ளதாக அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவித்துள் ளார்.

இந்த நோய்யைக்கட்டுப்படுத்துவது மற்றும் அதனை முழுமையாக சுகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படவுள்ளது.


அலுமினியப்பாத்திரங்களில் சமைக்கப்பட்ட உணவுகள், சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுபானப்பாவனை மற்றும் உறங்களைப்பயன்படுத்துவது போன்றவை சிறிநீரக நோய்யை ஏற்படுத்துவதற்கான காரணிகளாக கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சர் திஸ்ஸகரலியத்த தெரிவித்துள்ளார். (த-9)

# உப அலுவலகம் புனரமைப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணியில் அமைந்திருக்கும் பருத்தித்துறை பிரதேச சபையின் உப அலுவலகம் 4 இலட்சத்து 76ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த காலப் போர் நடவடிக்கைகளாலும், சுனாமி அனர்த்தத்தினாலும் முற்றாக சேதமடைந்த இவ் அலுவலகம் மீள்கட்டுமான செயற்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படுகிறது. (த-35)




கரவெட்டி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட அறநெறிப்போட்டிகளில் பரிசுபெற்ற அல்வாய் சிறிபரமானந்த ஆச்சிரம மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை முதலாவது படத்திலும், ஆச்சிரம மாணவிகளால் நடித்துக் காண்பிக்கப்பட்ட அரிச்சந்திர மயான காண்டத்தில் கடைசிக்கட்டத்தை இரண்டாவது படத்திலும் காண லாம். (படங்கள்: மருதங்கேணி செய்தியாளர்)

# பொன் அணிகள் மோதல் இன்று

புனித பத்திரிசியார் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்கும் இடையிலான 89ஆவது வருடக் கிரிக்கெற் போட்டி இன்றும், நாளையும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பொன் அணிகள் மோதல் (Battle of the Golds) என அழைக்கப்படும் இப்போட்டி இரு தினங்களும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். இவ்வருடம் பத்திரிசியார் கல்லூரி அணிக்கு W.I. ஜக்ஷன் என்பவரும், யாழ்ப்பாணக்கல்லூரி அணிக்கு I. ஜனாத்தனன் என்பவரும் தலைமை தாங்குகின்றனர்.


இதுவரை ஆண்டுகளும் நடைபெற்ற போட்டிகளில் பத்திரிசியார் கல்லூரி 30 தடவைகளும், யாழ்ப்பாணக் கல்லூரி 15 தடவைகளும் வெற்றிபெற்றுள்ளன. 24 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. மிகுதிக்கான விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இவ்வாண்டு பத்திரிசியார் கல்லூரி அணி பங்குபற்றிய போட்டிகளில் 4 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. ஒரு போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஒரு போட்டியில் தோல்வி கண்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி அணி பங்குபற்றிய போட்டிகளில் ஒன்றில் வெற்றியும், ஒன்றில் தோல்வியும் கண்டுள்ளது. 4 போட்டிகள் வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்தன.

இவ்வருடம் இரு அணிகளும் சிறப்பான விளையாட்டு வீரர்களைக் கொண்டுள்ளன. எனினும் கடந்த 6 ஆண்டுகளாக பொன் அணிகள் மோதலில் தொடர்ந்து வெற்றி கண்டுவரும் பத்திரிசியார் கல்லூரி அணியை இவ்வருடம் யாழ்ப்பாணக் கல்லூரி அணி வெற்றி கொள்ளுமா? அல்லது பத்திரிசியார் கல்லூரி அணி தனது வெற்றியைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளுமா? என்பதை நாளைவரை பொறுத்திருந்து பார்ப்போம்.


## புனித பத்திரிசியார் கல்லூரி அணி



இருப்பவர்: திரு.சி.சகாயராஜா (விளையாட்டுத்துறை இ-வ பொறுப்பாசிரியார்) பி.பத்மமுரளி, வி.விதுபாலா, டபிள்யூ.ஜ.ஜக்ஷன் (தலைவர்), வண பிதா.ஜஸ்லின் பி.ஞானப்பிரகாசம் (அதிபர்), வி.ஜே. லூட்சன் (உபதலைவர்), எஸ்.ஜெனான்ராஜ், திரு. ஏ.எஸ்.நிஷாந்தன் (பயிற்றுனர்), ஜே.ஜதீஸ்வரன், திரு.பி.ஜெயக்குமார் (கிரிக்கெற் பொறுப்பாசிரியர்)

நிற்பவர்: ஏ.மலின்குமார், இ.எவ்.டெஸ்மன் (இ – வ) எஸ்.நரேஸ், பி.நவதீபன், ஜே.சி.பெஸ்ரன் கொலின், ஏ.ஜெயந்திரன், எம்.டியூனோ மனோச், ஆர்.பி.றெக்னோ, எம்.ஏ. நிலோஷன்

## யாழ்ப்பாணக் கல்லூரி அணி



இருப்பவர்: திரு.ஆர்.குகன் (பயிற்றுனர்), இ-வ ரி.பிரியதரன் (உபதலைவர்), என்.ஏ.விமலேந்திரன் (அதிபர்), என்.ஜெனார்த்தனன் (அணித் தலைவர்), என்.சசிதரன், திரு.பி.எல்.மோகனகுமார் (விளையாட்டு அதிகாரி).

நிற்பவர்: ஜே.நிகிதன், எஸ்.நிரோஷன் (இ – வ) எம்.கிறிஷாந்தன், எஸ்.யதுர்ஷன், ஜே. செந்தூரன், வி.ஜெயால் செகான், கே.ஐ.டிஷான், எஸ்.கோமளதரன், எம்.சிறிஷாந்தன், ஆர்.மயூரன், ஜே.தர்ஷன்.

சமூகமளிக்கவில்லை: ஆர்.ரயூரன், ஆர்.அமலதீசன்.

## இறுதி வரை போராடுவோம்

எமது கல்லூரி அணி அனுபவ வீரர்களையும், குறைந்தளவு அறிமுக வீரர்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இது எமக்கு அனுகூலமாக இருக்கும் என நம்புகிறேன்.

அணியிலுள்ள பெருமளவான வீரர்கள் சகலதுறை வீரர்களாவர். அத்துடன் சிறந்த துடுப்பாட்ட வீரர்களும், சிறந்த சுழல்பந்து வீச்சாளர்களும் மற்றும் களத்தடுப்பாளர்களும் எமது அணியில் உள்ளனர். இதனால் எமது அணி இப்போட்டியில் வெற்றி பெறும் என நம்புகின்றேன்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணியையும் குறைத்து மதிப்பிடமுடியாது. இருப்பினும் வெற்றிபெற முயற்சிப்போம். பயிற்றுநர் – நிஷாந்தன், ஆலோசகர் – அருட் சகோதரர் பிரான்சீஸ் ஆகியோரின் வழித்துணை எமக்கு மென் மேலும் உறுதுணையாக இருக்கும்.

**டபிள்யூ.ஜ.ஜக்ஷன்**
**அணித்தலைவர், புனித பத்திரிசியார் கல்லூரி.**

## கடின உழைப்பு அவசியம்



எமது கல்லூரி அணியும், யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் இவ்வருட பருவ காலத்தில் சிறப்பாக செயலாற்றியுள்ளனர். எமது அணி வீரர்கள் இப்போட்டியில் சிறப்பாக விளையாடுவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

இருப்பினும் ஆடுகளத்தில் பொறுமை அர்ப்பணிப்பு, முயற்சி, கடும் உழைப்பு போன்றவற்றில் சிறப்பாக செயற்படுவதோடு, தங்களின் திறமைகள், ஆற்றல்களை முழுமையாக வெளிப்படுத்தும் அணி வெற்றிப்படியை எட்டமுடியும்.

எமது அணியில் களத்தடுப்பு, துடுப்பாட்டம், பந்துவீச்சு போன்ற துறைகளில் திறமையான வீரர்கள் காணப்படுவதோடு, அதிகமாக சகலதுறை வீரர்களையும் உள்ளடக்கி இருப்பதனால் வெற்றி வாய்ப்புக்கள் எமக்கு அதிகம் காணப்படுகின்றது.

ஆகவே மிகுந்த நம்பிக்கையுடனும், மனவுறுதியுடனும் போட்டியை எதிர்கொள்ள எமது அணி தயாராகவுள்ளது.

**ஏ.எஸ்.நிஷாந்தன்**
**பயிற்றுனர், பத்திரிசியார் கல்லூரி.**

## ஒற்றுமையுடன் போட்டியை எதிர்கொள்வோம்

'பொன் அணிகள் போர்' என வர்ணிக்கப்படும் இப் பெரும் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி அணி சார்பாக தலைமைப்பதவி வகிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தப் போட்டியில் இரு அணிகளும் சிறப்பாக விளையாடுவதற்கு இறைவனை வேண்டுகின்றோம்.

எமது அணி கல்லூரி அதிபர், விளையாட்டுக்குழுவினர், பயிற்றுவிப்பளார், பழைய மாணவர்களின் சிறப்பான வழிநடாத்தலில் இப் போட்டியில் நமது வீரர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் போட்டியை எதிர்கொள்வோம்.

இதேவேளை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அணியினரையும் இப் போட்டியில் சிறப்பாக விளையாட வாழ்த்துகின்றோம்.

*இயேசுவே வாழ்வின் ஒளி*

**ஜெனார்த்தனன், அணித்தலைவர்.**

## சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணக் கல்லூரி – சென் பற்றிக்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான பொன்னணிகள் போரில் இரு அணிகளும் சிறப்புற விளையாடி விளையாட்டின் மகிமையை உணர்த்த நாம் மனமார வாழ்த்துகின்றோம்.

**பயிற்றுனர்**
**யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.**

## பத்திரிசியார் கல்லூரி

### யார் இவர்கள்?

***டபிள்யூ.ஜ. ஜக்ஷன்:-** தலைவர் இரண்டாம் வருடம். விருது பெற்றவர். நேர்த்தியான இடதுகை மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை மிதவேகப்பந்து வீச்சாளர். எவ்விடத்திலும் பலமான களத்தடுப்பில் ஈடுபடக் கூடியவர்.

***வி.ஜே.லூட்சன்:-** உதவித் தலைவர் மூன்றாம் வருடம். விருதுபெற்றவர். வலதுகை மத்திய வரிசைத் துடுப்பாட்டவீரர். பயனுள்ள வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர். போட்டியின் போது திருப்புமுனையை ஏற்படுத்தக் கூடியவர்.

***வி.விதுபாலா:-** நான்காம் வருடம் விளைவுள்ள இடதுகை ஆரம்ப மிதவேகப் பந்து வீச்சாளர். இடதுகை துடுப்பாட்டவீரர். நிலைத்து நின்று ஓட்டங்களைப் பெறுவதில் வல்லவர். பலமான Gully நிலைத் தடுப்பாளர்.

***எஸ்.ஜெனான்ராஜ்:-** மூன்றாவது வருடம். ஆரம்ப வலதுகை துடுப்பாட்ட வீரர். அதிகூடிய ஓட்டங்களைப் பெறக்கூடியவர். பயனுள்ள மாற்றுப் பந்து வீச்சர்ளர் Slip நிலையில் சிறந்த களத்தடுப்பாளர்.

***ஜே.ஜதீஸ்வரன்:-** மூன்றாவது வருடம் சிறந்த விக்கெற் காப்பாளர். ஆக்ரோஷமான வலதுகைத் துடுப்பாட்ட வீரர். மிகப் பெறுமதியான ஓட்டங்களைப் பெறுவதில் வல்லவர்.

***ஏ.ஜெயந்திரன்:-** மூன்றாவது வருடம் வலதுகை ஆரம்பத்துடுப்பாட்ட வீரர். நிதானமாக ஓட்டங்களைப் பெறுவதில் வல்லவர். சிறந்த முன்னிலை களத்தடுப்பாளர்.

***பி.பத்மமுரளி:-** மூன்றாவது வருடம் Cover நிலையில் சிறந்த களத்தடுப்பாளர். நேர்த்தியான வலதுகை சுழல் பந்துவீச்சாளர்.

## யாழ்ப்பாணக் கல்லூரி

### யார் இவர்கள்?

***என்.ஜெனார்த்னன்:-** அணித்தலைவர். இரண்டாம் வருடம். ஊடறுக்கக்கூடிய வலதுகை ஆரம்பப் பந்துவீச்சாளர். அடித்தாடக்கூடிய வலதுகை மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்.

***ரி.பிரியதரன்:-** உபதலைவர் இரண்டாம் வருடம். நுட்பமான வலதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். வலது கை சுழல்பந்துவீச்சாளர்.

***என்.சசிதரன்:-** இரண்டாம் வருடம். வலதுகை மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர். பயனுள்ள பந்து வீச்சாளர் எல்லையில் களத்தடுப்பில் ஈடுபடக்கூடியவர்.

***ஏ.ஆர்.டிஷான்:-** இரண்டாம் வருடம். வலதுகை துடுப்பாட்ட வீரர். பயனுள்ள பந்து வீச்சாளர்.

***ஆர்.மயூரன்:-** இரண்டாம் வருடம். விக்கெற்காப்பாளர். அடித்தாடக்கூடிய வலதுகை மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர்.

***எஸ்.யதுர்ஷன்:-** இரண்டாம் வருடம். சகலதுறை வீரர். தலைவருடன் இணைந்து ஆரம்பப் பந்து பரிமாற்றத்தை மேற்கொள்ளும் மிதவேகப் பந்துவீச்சாளர்.

***ஜே.செந்தூரன்:-** மூன்றாறாம் வருடம். இடது கை மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை சுழல்பந்து வீச்சாளர்.

***வி.ஜொயல் செகான்:-** இரண்டாம் வருடம். அடித்தாடக்கூடிய வலது கை துடுப்பாட்ட வீரர். திறமையான களத்தடுப்பாளாரும், மாற்றுப் பந்து வீச்சாளரும் ஆவார்.

***எஸ்.நிரோஷன்:-** புதியவர். நம்பகரமான இடதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகை சுழல் பந்து வீச்சாளர்.

***எம்.சிறிஷாந்தன்:-** புதியவர். அடித்தாடக்கூடிய வலதுகை துடுப்பாட்ட வீரர். எல்லையில் நின்று களத்தடுப்பில் ஈடுபடுபவர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# அடியவர் தாகம் தீர்த்த நயினை சோம சேகரம்

ஈழத்து இல்லறஞானி என சர்வதேச மட்டத்தில் போற்றிப் புகழப்பட்டவர் நயினை க.இராமச்சந்திரா அவர்கள். நயினைத் தாயின் ஒருகண் இராமச்சந்திரா என்றால் மறுகண்ணாக திகழ்ந்தவர் நயினை தந்த இல்லறஞானி என அம்பாளின் அடியவர்களால் போற்றப்பட்டவரும் மதிக்கப்பட்டவருமான அண்மையில் இறைவியின் அடியில் அமைதியடைந்த அமரர் நயினை இல் லறஞானி தம்பையா சோமசேக ரம் அவர்கள்.

அமரர் நயினை நாகபூஷணி அம்பாளின் அருள் தொண்டனாகவும் அடியவர்களுக்கு அடியவனாகவும், நோயாளருக்கு பரியாரியாகவும், ஆத்மீக சேவையாளருக்கு ஒரு வழிகாட்டிய நற் குருவாகவும் திகழ்ந்த பெருநெறியாளர். தம்மையே புகழ்ந்து இச்சை பேசுகின்ற மக்கள் மத்தியில் தற் புகழ்ச்சி அறவே அற்று என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற அப்பர் அருள் வாக்கிற்கமைய அம்பாளிற்கும் அம்பாளின் அடியவர்களிற்கும் தன்னிகரில்லாத் தனித் தொண்டனாக தனித்து நின்று தெய்வீக சேவையாற்றிய சேவையாளன். நயினை தந்த சைவப் பெரியார்.

''சலம்பூ வொடு தூபமறந்தறியேன்'' என்று நாவுக்கரசர் நவின்றவாறு சலமாரிய தண்ணீர் தந்து தாயைக்கண்டு அவள் அடிதொழுது அருள் ஏறி அருள் ஆடிநின்ற கோடானு கோடி அடியவர்களுக்கு தண்ணீரால் தாகம் தீர்த்த தெய்வீக அருள் தொண்டைக் கூறுவதா? அலைகடல் நடுவேபூக்கொண்டு வந்து நாகபூசணியை பூசித்த நாகம்போன்று அம்பாளிற் கென்றே பூந்தோட்டம் அமைத்து அப்பூந்தோட்டத்தில் மலர்ந்த மலர் கொண்டு எம் பிராட்டிக்குச் சூட்டி பக்திப்பரவச நிலையில் கண்ணீர் அருவியாய்ச் சொரிய நின்ற ஆனந்தப் பரவச தெய்வீக நிலை யைக் கூறுவதா? வாசனை கலந்த மருந்துச் சரக்குகளை உரலில் இட்டு இடித்துத் தூளாக்கி நறுமணம் கமழ எம்பிராட்டிக்கு தூபத் தொண்டைப்புரிந்த தூபலார் திருத் தொண்டைக் கூறுவதா 'நான் கண்மூடி மௌனியாகி தனியே இருப்பதற்கெண்ணினேன் எண்ண மிது சுவாமி நீர் அறியாததோ' என்று தாயுமான சுவாமிகள் சொன்னவாறு வாய் போசாது மௌனியாக இருந்த மோன நிலையைக் கூறுவதா.

நயினாதீவில் நன்னீர் கிணறுகள் இருந்தாலும் காலப் போக்கில் அன்னீர் உவராகிவிடும். ஆனால் அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபிபோல் அமரர் அவர்களால் உருவாக்கப்பட்ட கிணறு வற்றாத ஊற்றாக அள்ள அள்ள சுரந்து கொண்டு இருக்கின்றது.

அம்பாளிற்கு ஒவ்வொரு பூரணை தினத்திலும் இரவு ஸ்ரீ சக்கர பூசை நடைபெறுவ துண்டு பெரியார் அவர்களும் தான் வைத்துப் பூசிக்கின்ற ஸ்ரீசக் கரத்தை அப்பூசையில் வைத்து எடுத்துவந்துள்ளார். தொடர்ந்து செய்துவந்த பூசையில் வைக்கப்பட்ட ஸ்ரீசக்கரம்தான் இறை பதம் அடைவதற்கு இரு நாட்களுக்கு முன் அச் ஸ்ரீசக்கரத்தை தனது இரண்டாவது புதல்வன் வைத்தியர் சபாநாதனிடம் கொடுக்கும்படி பணித்துள்ளார்.

நவராத்திரி தினமான ஒன்பது தினங்களும் தன்னை பூரணமாக அம்பாளிடம் அர்ப்பணித்த அருந் தொண்டர் அத்தினங்களில் சலம்பூவொடு தூபமேற்றி மௌனத் தியானத்தில் அம்பாளோடு ஒன்றி தியான நிலையில் நின்று அவர் தந்த தண்ணீர் தானம் அது வெறும் தண்ணீரல்ல அம்பாளின் அருள் தீர்த்தம். அதைப் பருகிய பக்தர்கள் பெரும் பேறு பெற்றவர்கள்.

நயினை -நா.கோபாலகிருஷ்ணன்
தலைவர் சப்த தீவக தீவ்விய ஜீவன சங்க சமாசம்

நயினைச்சித்தர் சொன்னவாறு 'முற்றுமாய் நிறைந்த பூராணந்த முத்திதா நாகபூசணியே' அந்த நிலையை அவர் அடைந்து விட்டார்.

ஓம்சாந்தி

# இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

(யாழ்ப்பாணம்)

யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வாணர் விளையாட்டு அரங்கில் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவகவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.இராதா கிருஷ்ணனும், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன், தீவக வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.சிவபாதம், தீவக வலய இளைப்பாறிய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் த.தவராசா ஆகியோரும்.

கௌரவ விருந்தினர்களாக இளைப்பாறிய அதிபர் சி.இரத்தின சபாபதி, பொதுச்சுகாதார உத்தியோகத்தர் ச.பார்த்தீபன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (கு-126)

# உளவியல், சுகாதாரப் பயிற்சி

டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையும் இணைந்து பயிற்றப்பட்ட ஆசிரியர், தொண்டர்கள் மூலம் கோப்பாய் கல்விக் கோட்டத்திலுள்ள ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில், ஆறாம் ஆண்டு தொடக்கம் எட்டாம் ஆண்டுவரையான மாணவர்களுக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை உளவியல், சுகாதாரம் சம்பந்தமான பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

இப் பயிற்சியில் பங்கு பற்றும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவதோடு அவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. (து-134)

# 2008 இல் இலங்கை கண்ணிவெடியற்ற நாடாக மாறும்-பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

2008ஆம் ஆண்டில் இலங்கை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாறுமென்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் பாதுகாப்பை உறுதிசெய்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதை அரசாங்கம் முதன்மைப் பணியாகக் கொண்டு செயற்படவுள்ளது.

இலங்கையில் கௌரவமான சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன்போது நாளாந்த செயற்பாடுகளை நேரடியாகப் பாதிக்கும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்று பிரதமர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜப்பான் வழங்கிய கண்ணிவெடியகற்றும் உபகரணத் தொகுதியை ஏற்றுக் கொண்டு கருத்துத் தெரிவித்த போதே பிரதமர் இந்த விடயங்களைத் தெரிவித்தார். நவீன தொழில் நுட்பங்களை கொண்ட இவ் உபகரணங்கள் 20 இலட் சம் டொலர்பெறுமதியுடையது. (கு-9)

# விவசாய சம்மேளன கூட்டத் தீர்மானங்கள்

(சாவகச்சேரி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை மீசாலை கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டுள்ளன.

இக் கூட்டத்தில் நெற் காணிகளுக்கு இடாப்புமுறையை மீளச்செயற் படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இப் பிரதேசத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த வயற் பிரதேசங்களைச் சீர்படுத்தி இடாப்புத் தயாரிக்கப் பட்டு, மக்களின் பார்வைக்காக வைக்கப்படும். இதேபோல மேட்டு நில பயிர்க் காணிகளுக்கும் இடாப்புத் தயாரிக்கப்படும்.

அத்துடன் வயற் காணிகளுக்கு பரப்புக்கு ஒரு ரூபா வீதம் வரி அறவிடுவதெனவும், 5 ஏக்கர் பரப்பளவுள்ள நெற்காணிகளுக்கே உரமானியம் வழங்குவதெனவும், அதற்காக விண்ணப்பிப்பவர்கள் சொந்தக் காணியின் காணி உறுதியையும், குத்தகைக் காணியாயின் குத்தகைச் சீட்டையும் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் மேட்டு நிலப் பயிர்க் காணிகளுக்கு உரமானியம் வழங்கப்படமாட்டாது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (து-108)

# இராசி பலன்

**10.03.2006**
**(மாசி 26, வெள்ளிக்கிழமை)**
**ஏகாதசி முன்னிரவு 9.58 மணிவரை**
**புனர்பூசம் முற்பகல் 12.43 மணிவரை**
**இராகுகாலம் 10.53-12.23 மணிவரை**
**சுபநேரம் 6.23-7.53 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | தாய்வழி உறவு, புதிய சிந்தை, கல்வியில் ஆர்வம், பெரியோர் உதவி. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன சுகம், தெய்வசிந்தை, பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | கடினவார்த்தை, காரிய தாமதம், பண விரயம், வேலைச்சுமை. |
| கடகம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, கற்பனை மிகுதி. |
| சிங்கம் | பிரயாணம், சுபசெலவு, அபகீர்த்தி, சயனசுகக்குறைவு. |
| கன்னி | எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வ தரிசனம், உறவினர் வருகை, விருந்துபசாரம். |
| துலாம் | காரிய சித்தி, செய்தொழில் முன்னேற்றம், கல்வியில் ஆர்வம், பிறர் உதவி. |
| விருச்சிகம் | சீரப்பிரயாசை, போசனசுகம், பிதாசிந்தை, கட்டுப்பாடு. |
| தனுசு | மாதர் நட்பு, பிரயாணபயம், வீண்பகை, திடீர் நன்மை. |
| மகரம் | தெய்வதரிசனம், காரிய அனுகூலம், கலந்துரையாடல், விருந்துபசாரம். |
| கும்பம் | செய்தொழில் விருத்தி, தேகநலன், காரிய அனுகூலம், பகைவர் நேசம். |
| மீனம் | தொழில் சிந்தை, குடும்பக்கவலை, பணவிரயம், திடீர்நன்மை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது. - வளவன்

# ஜெனீவா தீர்மானங்களை நடைமுறைப் படுத்த வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுவார்த்தை முடிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தேசிய சமாதான சபை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. தமிழர் தாயகத்தில் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தி வரும் இராணுவத்தினர் மற்றும் இராணுவத் துணைக் குழுவினரின் செயற்பாடுகளை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் சமாதான சபை தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் வவுணதீவில் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தினுள் இடம்பெற்ற காவலரண்மீது நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக ஜெனீவா கூட்டறிக்கைக்கு அச்சுறுத்தல் எழுந்துள்ளது. ஜெனீவா கூட்டறிக்கைக்கு குந்தகம் விளைவிக் கும் வகையில், எதிர்காலத் திலாவது தாக்குதல் நடத்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் எனவும், இரு தரப்பினரும் வன்முறைகளுக்கு முடிவு கட்ட வேண்டும் எனவும் சமாதானசபை மேலும் கேட்டுள்ளது. (கு)

# வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாணப் பிரதேச சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில், மேற்படி சங்கத்தின் தலைவர் துரை ஆரோக்கிய தாசன் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் நடப்பாண்டுக்குரிய புதிய நிர்வாக சபைத் தேர்வுடன், புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல், அங்கத்துவ அட்டை வழங்குதல், மாதம் 20ரூபா கழிப்பதற்கான சம்மதத்தைப் பெறுவதற்குப் படிவம் வழங்குதல் முதலிய நிகழ்வுகள் நடைபெறும். (து)

# மகப்பேற்று சத்திரசிகிச்சைக் கூடம் யாழ். வைத்தியசாலையில் திறப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய மகப்பேற்று




சத்திரசிகிச்சைக் கூடம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

நவீன முறையில் அமைக்கப்பட்ட சத்திரசிகிச்சைக் கூடத்தினை ஜேர்மனிய மனிதாபிமான டயகொனி தொண்டு நிறுவனத்தின் பணிப்பாளர் ரி.தம்பிராஜா, இலங்கை வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் திறந்து வைத்தனர்.

பலமில்லியன்ரூபா செலவில் அமைக்கப்பட்ட சத்திரசிகிச்சை கூடத்திற்கு யாழ். இலங்கை வங்கி 3 இலட்சம் ரூபா நிதியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (த-133, 132)

# புலிகள் தொடர்பான நிலைப்பாட்டை சர்வதேசம் வெளிப்படுத்த வேண்டும்

## ஜாதிகஹெல உறுமய வலியுறுத்தல்

(கொழும்பு)

புலிகள் தொடர்பான தமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் தெளிவுபடுத்த வேண்டும் என்று ஹெல உறுமயவின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் வேண்டுகோள் விடுத்தார். அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களை வெளிநாடொன்றில் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமுமில்லை. தற்போதைய பேச்சின்போதும் அதற்கு முன்னரும் இதே நிலைப்பாட்டையே நாம் வலியுறுத்தி வந்தோம் என்றும் அவர் கூறினார்.

தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த சட்டமூலத்தில் பல முரண்பாடுகள், சிக்கல்கள் உள்ளன. இந்த அதிகாரசபை பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறக் கூடியதாக விருக்குமா என்பதே தற்பொழுது எழும்பிரச்சினையாகும் என்று தெரிவித்த தேரர் கடந்த அரசாங்கங்கள் இழைத்த தவறுகளுக்கு அதனை அடுத்து ஆட்சிப் பொறுப்பையேற்கும் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டியதாக விருக்கும் இதுவே யதார்த்தமாகும் என்றும் கூறினார். (ச-4)

# பா.ம.க. விடுதலை சிறுத்தை இரகசிய பேரம் அ.தி.மு.க., தி.மு.க வுக்கு எதிராக செயல்பட முடிவு



பா.ம.க. வேட்பாளர்கள் நிற்கும் தொகுதியில் எங்களுக்கு ஆதரவளித்தால், விடுதலைச் சிறுத்தைகள் வேட்பாளர்களுக்கு நாங்களும் ஆதரவளிப்போம் என்று பா.ம.க- விடுதலை சிறுத்தை கட்சிகளுக்கிடையே இரகசிய பேரம் நடந்து வருகிறது. இரு கட்சிகளும் தாங்கள் முறையே கூட்டணி வைத்துள்ள கட்சிகளான தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகளுக்கு எதிராகச் செயல்பட முடிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. இதையடுத்து இரு கட்சித் தலைமைகளும் அதிர்ச்சி அடைந்துள்ளன.

தி.மு.க கூட்டணியில் 2001ஆம் ஆண்டு இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார் விடுதலைச் சிறுத்தைகளின் அமைப்பாளர் திருமாவளவன். அதேநேரத்தில் எதிர்முகாமில் பா.ம.க இருந்தது. தி.மு.க தலைமையிடத்தில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக திருமாவளவன், எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டார். அதுவரை எலியும், பூனையுமாக இருந்த திருமாவளவனும் ராமதாஸும் திடீரென கை கோர்த்தனர். தமிழ் பாதுகாப்பு இயக்கம் என்ற அமைப்பை இருவரும் ஏற்படுத்தி தமிழ்த் திரையுலகை கலக்கினர்.

ராமதாசும், திருமாவளவனும் இணைந்தது அந்த இரண்டு இயக்கங்களின் தொண்டர்களுக்கு முழு திருப்தியைத் தரவில்லை. கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் பா.ம.கவும் விடுதலைச் சிறுத்தைகளும் மோதிக் கொண்ட சம்பவங்களில் எத்தனையோ பேர் இரத்தம் சிந்தினர். இந்த வழக்குகள் இன்னும் முடியாமல் கோர்ட்டுக்கு சென்று வந்த வண்ணம் உள்ளனர்.

அப்படிப்பட்ட இயக்கங்கள் திடீரென இணைந்துவிட்டதால் அம்மாவட்டங்களில் புதிய சண்டை ஏற்படவில்லை என்பது மட்டுமே உண்மை. ஆனால் இரு தரப்பிலும் தொண்டர்கள் மௌன யுத்தம் நடத்தி வந்ததையும் மறுக்கமுடியாது. பா.ம.க வலிமையாக உள்ள மாவட்டங்களில் விடுதலைச்சிறுத்தைகளும் வலிமையாக வளர்ந்து விட்டது. அவர்களை விட்டுவிட்டால் வாக்கு வங்கி பாதிக்கும் என்று உணர்ந்த ராமதாஸ் திருமாவளவனை கட்டி அணைத்துக் கொண்டார்.

விடுதலைச் சிறுத்தைகள் நிற்கும் இடத்தில் தி.மு.க நின்றாலும் சரி, கூட்டணியில் எந்தக் கட்சி நின்றாலும் சரி, விடுதலைச் சிறுத்தைகளுக்கு பா.ம.க.வினர் வாக்குப் போடவேண்டும்.

அதேபோல பா.ம.க போட்டியிடும் தொகுதிகளில் அ.தி.மு.க அல்லது அக்கூட்டணி கட்சிகள் போட்டியிட்டாலும் பா.ம.கவுக்கே விடுதலைச் சிறுத்தைகள் வாக்குப் போடவேண்டும். இந்த 'மாபெரும் பேரம் திட்டம்' குறித்து பா.ம.க தலைவர்கள் இரகசியமாக விடுதலைச் சிறுத்தைகளுடன் பேசி வருகின்றனர்.

ஆனால் இதை ஏற்றுக்கொண்டால் கடைசியில் அதல பாதாளத்தில் விழுந்து விடுவோம் என்று விடுதலைச் சிறுத்தைகள் அச்சப்படுவதாக அந்த இயக்கத்தின் நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன. பா.ம.க நடத்திவரும்இரகசிய பேரம் தி.மு.க., அ.தி.மு.க தலைமைகளுக்கு எட்டிவிட்டது. இரு தலைமைகளும் கடும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளன.

இந்த இரகசிய பேரத்தை உடைக்க பா.ம.க நிற்கும் தொகுதிகளையே விடுதலைச் சிறுத்தைகளுக்கு வழங்க வேண்டும் என்று அ.தி.மு.க தலைமைக்கு அக் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (து)

## 65 வயது முதியவரின் நடைப் பயணம்


மேற்கு வங்கத்தைச் சேர்ந்த திலீப்குமார் பட்டாச்சாரிய என்ற 65 வயது முதியவர் 8500 கிலோ மீற்றர் தூரம் நடைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

சித்திரவதை இல்லாத இந்தியா உருவாகப் பாடுபடுவதாகக் கூறிய இவர் கடந்த திங்கட்கிழமை பரமக்குடி வந்தார்.

மேற்கு வங்க மாநிலம், ஹுக்ளி மாவட்டம் ஸ்ரீராம்பூர் நகரைச் சேர்ந்தவர் திலீப் குமார். இவர் ஓய்வு பெற்ற ரயில்வே பொறியியலாளர்.

சித்திரவதை இல்லாத இந்தியாவை உருவாக்குதல், தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தி இவர் 8500 கிலோ மீற்றர் தூரம் நடைப் பயணம் மேற்கொண்டுள்ளார். (து)

## வைகோ வகுக்கும் அரசியல் வியூகம்



சட்டசபைத் தேர்தலில் பரபரப்பை ஏற்படுத்தி வரும் ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ மார்ச் 13இல் பொதுக் குழுவை கூட்டி, தேர்தல் வியூகத்தை வகுக்கு உள்ளார். தற்போது வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

மாநில நிர்வாகிகள், முன்னாள் எம்.எல்.ஏக்கள், மாவட்டச் செயலர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. கட்சிக்குள் ஜாதி பிரச்சினை ஏதும் வந்துவிடக்கூடாது என்பதில் அவர் கவனம் செலுத்துகிறார்.

வைகோ சட்டசபைத் தேர்தலில் போட்டியில்லை, ம.தி.மு.க துவங்கி 13 ஆண்டு காலமாகியும் தமிழக சட்டசபையில் பிரதிநிதித்துவம் எதுவும் வைகோவினால் பெற முடியவில்லை.. அ.தி. மு.க, தி.மு.க இருஅணிகளி லும் மாறி மாறிக் கூட்டணி வைத்தும் லோக் சபாவில் மட்டுமே அவரும் அவரது கட்சியும் கால்பதி க்க முடிந்தது.

பலவீனமாக உள்ள தி.மு.க மீண்டும் தன்னாலேயே பலமாகி எதிர்காலத்தில் அது தனக்கு பாதகமாக அமைந்துவிடக் கூடாது என்பதில் அவர் கவனமாக உள்ளார். இதனால்தான் அவர் தி.மு.க கூட்டணியில் இருந்து அ.தி.மு.க கூட்டணிக்கு தாவியுள்ளார். எனவே இந்தக் கால கட்டத்தில் கட்சி வளர்ச்சியில் கவனம் செலுத்தி அடுத்த சட்டசபை தேர்தலில் தமிழகத்தில் தனது கட்சியையும் தன் னையும் பிரதான சக்தியாக வளர்க்க வைகோ திட்டமிட்டுள்ளார்.

இதைக் கருத்தில் கொண்டே இந்த சட்ட சபைத் தேர்தலில் போட்டியிட அவர் விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. (து)

இந்திய வலம்

சங்கரராமன் கொலை வழக்கு

## விஜயேந்திரரை விடுவிக்க நீதிமன்றம் மறுப்பு

காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி விஜயேந்திரர், அவரது தம்பி ரகு ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை கடந்த புதன்கிழமை புதுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. அக்கொலை வழக்கில் சதித்திட்டம் தீட்டியதாகக் கூறியுள்ள புகாருக்கு எந்த ஆதாரமும் இல்லாததால் தங்களை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று விஜயேந்திரர், ரகு ஆகியோர் மனு தாக்கல் செய்திருந்தனர். அம்மனுக்கள் மீது அரசு தரப்பு வழக்கறிஞர் வி.பாலசுந்தரம் ஆட்சேப மனு தாக்கல் செய்திருந்தார். அம் மனுக்களின் மீது இரு தரப்பினரும் விவாதம் செய்தனர்.

இந்நிலையில் அந்த மனுக்களின் மீது புதுவை தலைமை நீதிபதி எம்.சின்ன பாண்டி, சங்கரராமன் கொலை வழக்கிலிருந்து விஜயேந்திரர், ரகு ஆகியோரை விடுவிக்க முடியாது என்று தீர்ப்பு வழங்கினார்.

மேலும் இந்த வழக்கிலிருந்து தங்களை விடுவிக்கக்கோரி அவர்கள் தாக்கல் செய்திருந்த மனுக்களை அவர் தள்ளுபடி செய்தார்.



ஜெயேந்திரர் விஜயேந்திரர்

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்கு தாக்கதல் செய்ய ஆதாரம் உள்ளதா என்பதைத்தான் இந்த நீதிமன்றம் பார்க்க வேண்டும். இப்போதைய நிலையில் அப்ரூவர் ரவி சுப்பிரமணியத்தின் வாக்குமூலத்தை முழுமையாக விசாரித்து அறிய முடியாது.

அப்ரூவர் ரவி சுப்பிரமணியத்தின் வாக்குமூலத்திலும், பொலிஸ் விசாரணையில் சேகரித்த ஆவணங்கள் அடிப்படையிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய ஆதாரம் உள்ளது.

எனவே வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரும் மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்றார் நீதிபதி. (து)

## சுக வனிதையருக்கான பரிசோதனை

(பொன்னாலை)

தொல்புரம்- பாணாவெட்டி மத்திய மருந்தகத்தில் சுக வனிதையர்களுக்கான நீரிழிவு, இரத்த அமுக்கம் சம்பந்தமான பரிசோதனைகள் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இப்பரிசோதனைகள் ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது புதன்கிழமைகளில் நடைபெற்று வருகின்றதென்று மேற்படி வைத்தியசாலை குடும்பநல சுகாதார உத்தியோகத்தர் மகேந்திரராசா ரஞ்சிதமலர் தெரிவித்தார். (த-49)


## சிறு விளம்பரம்

கன்னாதிட்டி சந்திக்கருகில் கஸ்தூரியார் வீதி, 301 ஆம் இலக்க கட்டடத்தின் மேல் மாடியில் இயங்கி வந்த மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், கமரா, எலக்ரோனிக் பொருட்கள் திருத்துதல் ஆகிய வேலைகளைச் செய்துவரும் ரகு போட்டோ டெக் நிறுவனம் இப்பொழுது தனது வேலைகளை ஆரம்பித்துள்ளது.

எனினும் இந்நிறுவனம் இந்த மாதம் 13ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சு.நாராயணசாமி
ரகு போட்டோ டெக்

9.3.2006 185


(.06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பத்திரிசியார் கல்லூரி

*ஜே.எவ்.கொலின்:- இரண்டாம் வருடம். உயரமான வலது கை வேகப்பந்து வீச்சாளர். இவரது உயரம் எந்தவொரு துடுப்பாட்ட வீரரையும் துடுப்பெடுத்தாடும் போது நிலைதளரச் செய்யக்கூடியது. நம்பகரமான இறுதி வரிசை வலது கை துடுப்பாட்ட வீரர்.

*ஏ.மரின்குமார்:- இரண்டாவது வருடம். வலது கை மூன்றாம் நிலை துடுப்பாட்ட வீரர். வலது கை சுழல்பந்து வீச்சாளர். துடிப்பான முன்னிலை களத்தடுப்பாளர்.

*ஆர்.பி.றெக்னோ:- புதியவர். இடது கை துடுப்பாட்ட வீரர். திறமையுள்ள வலது கை சுழல்பந்து வீச்சாளர். எல்லையில் நின்று களத்தடுப்பில் ஈடுபடக்கூடியவர்.

*எம்.ஏ.நிலோஷன்:- புதியவர். வலது கை மிதவேகப்பந்து வீச்சாளர். முறமையான வலதுகை துடுப்பாட்ட வீரர். திறமையான சகலதுறை வீரர்.

*எம்.ஜே.மனோஜ்:- புதியவர். அடித்தாடக்கூடிய வலது கை துடுப்பாட்ட வீரர்.

*எஸ்.நரேஷ்:- புதியவர். வலது கை துடுப்பாட்ட வீரர்.

*பி.நவ்தீபன்:- புதியவர். குழந்தை நட்சத்திரம்.

*இ.எவ்.டெஸ்மன்:- புதியவர். வலதுகை துடுப்பாட்ட வீரர்.

### யாழ்ப்பாணக் கல்லூரி

*எம்.கிறிஷாந்தன்:- புதியவர். வலது கை துடுப்பாட்ட வீரர்.

*ஆர்.ரயூரன்:- புதியவர். வலது கை சுழல்பந்து வீச்சாளர்.

*ஜே.தர்ஷன்:- புதியவர். வலதுகை சுழல்பந்து வீச்சாளர்.

*ஜே.நிகிதன்:- குழந்தை நட்சத்திரம். வலது கை துடுப்பாட்ட வீரர். வலது கை பந்து வீச்சாளர். திறமையான களத்தடுப்பாளர்.

*எஸ்.கோமளதரன்:- புதியவர். இடது கை துடுப்பாட்ட வீரர். இடது கைப்பந்து வீச்சாளர்.

*ஏ.அமலதீபன்:- புதியவர். அடித்தாடக்கூடிய வலது கை துடுப்பாட்ட வீரர். வலது கை மிதவேகப்பந்து வீச்சாளர்.



# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

70 மீள்பார்வை



பொன்னாடை போர்த்தும் ரஜனிகாந்த், கமலஹாசன்

டி.எஸ்.என்: பிரபுவுடைய நடிப்புத் திறமை பற்றி நீங்கள் என் நினைக்கிறீர்கள்?

சிவாஜி: பொதுவாக மற்ற நடிகர்களின் நடிப்புத்திறமை பற்றி நான் மதிப்பிட்டுச் சொல்வதில்லை. He is a talented per son அவன் நல்ல திறமைசாலி நன்றாக சேனலைஸ் செய்தால் இன்னும் சிறப்பான நடிகனாவான். தண்ணீர் ஒரு தேக்கத்தில் இருக்கிறது. அதைச் சரியாக வாய்க்கால் வெட்டிக் கொடுத்தால் எல்லா வயல்களுக்கும் பாயுமல்லவா? அதைப்போல அவனை சரியாகப் பயன் படுத்த வேண் டும். திறமையான இயக்குநர்களால் அவனுடைய நடிப்புத்திறமையை இன்னும் சிறப்பாக வெளிக் கொண்டு வரமுடியும்.

அவனுக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அவன் என்னைப் போல் நடிக்க மாட்டான். ஏதோ தெரிந்தோ தெரியாமலோ மக்கள் "அப்பா மாதிரியே நடிக்கிறான், நடக்கிறான்" என்று கூறுகிறார்கள். அது அவனுடைய தவறில்லை. அவன் என்னுடைய மகன் என்ற எண்ணத்தில் மக்கள் பார்க்கும் போது அதுபோல் தோன்றுகிறது. அவ்வளவு தான்.

### *யாருக்கு முதல் மரியாதை?*

டி.எஸ்.என்: இந்தக் காலகட்டத்தில் நீங்கள் நடித்த இன்னொரு அருமையான படம் வெளி வந்தது. அது டைரக்டர் பாரதிராஜா எடுத்த "முதல் மரியாதை" அந்தப் படத்தில் நடித்த அனுபவம் பற்றி நீங்கள் கூற விரும்புவது...



என் ஆச ராசாவே படத்தில் சுவலட்சுமியுடன் (1998)

சிவாஜி :பாரதிராஜா சின்னப்பிள்ளையில் இருந்து எனக்குத் தெரிந்தவர். வேண்டியவரும் கூட "அவர் எடுக்கும் படத்தில் நடிக்கவேண்டும்" என்று ஒரு நாள் கேட்டார். எனக்கு அப்போது உடல் நிலை சரியில்லை. இருந் தாலும் "சரி என்று ஒத்துக்கொண்டேன். அந்தப் படம் தான் முதல் மரியாதை"

ஷூட்டிங்கிற்காக ஒரு மாதம் மைசூர் சென்றிருந்தேன். சிவ சமுத்திரம் நீர்வீழ்ச்சியில் காவிரிக் கரையில் ஒரு மரத் தடியில் உட்கார வைத்திருந்தார். காலுக்குச் செருப்புக் கூட இல்லாமல் ஒரே ஒரு வேட்டி சட்டை கொடுத்து, ஒரு மாதம் என்னை அங்கே படுக்க வைத்திருந்தார் பாரதிராஜா. கிராமிய சூழ்நிலையில் எடுக்கப்பட்ட அந்தப் படம் மிகப் பெரிய வெற்றியடைந்தது.

இதற்கு ப் பிறகு சில வருடங்கள் கழித்து மீண்டும் என்னை வைத்து "பசும்பொன்" என்று இன்னொரு படம் எடுத்தார். அதில் நடிகை ராதிகாவும் நடித்தார்கள். அந்தப் படப்பிடிப்பிற்காகவும் மைசூர் பக்கம் சென்றோம் அங்கே இரவும், பகலும் படப்பிடிப்பு நடத்தினோம். படப்பிடிப்பு முடிந்து வந்தேன். திடீரென நோய்வாய்ப்பட்டேன் என் பல்ஸ்லோ ஆகிவிட்டது. உடனே என்னை ஆஸ் பத்திரிக்குத் தூக்கிச்சென்றுவிட்டார்கள்.



ஒன்ஸ் மோர் படத்தில் சிம்ரான் விஜயுடன்.... (1997)

அங்கே எனக்கு அறுவைச் சிகிச்சை செய்து என் நெஞ்சில் பேஸ்மேக்கர் போட்டு விட்டார்கள். எனக்கு பேஸ் மேக்கர் போடுவதற்குக் காரணமே பாரதிராஜா தான் ஆகையால் என் நெஞ்சில் எவ்வளவு நாள் பேஸ்மேக்கர் இருக்கிறதோ அவ்வளவு நாள் பாரதிராஜாவும் என் நெஞ்சில் இருப்பார்"

டி.எஸ்.என்: முதல் மரியாதை படத்தில் இருந்த மற்றொரு முக்கியமான அம்சம். அருமையான கிராமியப் பாடல்கள். அது பற்றி...

சிவாஜி: ஒரு படத்தின் பாடல்கள் மக்கள் மனதில் ஆழப்பதிந்தால் , அந்தப் பெருமை பாட்டெழுதியவரையும் , இசையமைப்பாளரையும் பாடியவரையும் சாரும் சினிமாவுக்கு எவ்வளவோ கவிஞர்கள் பாட்டு எழுதியிருக்கிறார்கள் முன்னாளில் பாபநாசம் சிவன் போன்ற பெரியவர்கள் இருந்தார்கள் பின்நாளில் கா.மு.ஷெரீப், மருதகாசி,. உடுமலை நாராயணகவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்று பலரைச் சொல்லலாம் அந்தக் காலகட்டத்தில் குறிப் பிடத் தக்கவர் கவிஞர் கண்ணதாசன்.

அவரைத் தொடர்ந்து கவிஞர் வாலி வந்தார். மிகச் சிறப்பான பாடல்களை எழுதினார். அதன் பிறகு கவிஞர் வைரமுத்து வந்தார். இதைப்போல் எத்தனையோ புதுக்கவிஞர்கள் இன்று திரை யுலகத்திற்கு வந்திருக்கிறார்கள். இருந்தாலும் இப்போது சில பாடல்களில் புரியாத ஆங்கில வார்த்தைகள் எல்லாம் சேர்ந்து ஒலிக்கின்றன. ஒரு வேளை மக்கள் அதை விரும்புகிறார்களோ என்னவோ!

நான் நடித்த பல படங்களுக்காக எண்ணற்ற பாடல்களை எழுதிக்கொடுத்தவர் என் அருமை நண்பன் கவிஞர் கண்ணதாசன். உயர்ந்த மனிதன் படத்தில் அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே என்று நான் வசனமாக நடித்துக் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்து அதையே பல்லவியாக வைத்து பாட்டெழுதித் தந்தவர் அவர். அவரை நான் புகழாத நேரமே இல்லை. அவரைப் பாராட்டும்போது



விருது வழங்கும் பிரஞ்சுத் தூதுவர் பிலிப்பெத்தீ ,தமிழக முதல்வர் ஜெயலலிதா

கவிஞர் என் கண்ணே! கண்ணதாசா
நீ கவிஞன் கம்பனையும் மிஞ்சுகிறாய்
காளிதாசனையும் மிஞ்சுகிறாய்! என்று கூறியுள்ளேன்.

அதே போல இன்றைய தலை முறைக் கவிஞன் வைரமுத்துவையும் மனதாரப் பாராட்டியிருக்கிறேன்.

கண்ணே வைரமுத்து!நீ கண்ணதாசனையும் மிஞ்சுகிறாய்! என்று கூறினேன். வைரமுத்துவையும் , கவிஞர் கண்ணதாசனைப் போல் புகழ் பெற வேண்டுமென்பதற்காக இவ்வாறு கூறினேன். பொதுவாகச் சிறு வயது முதலே எனக்குக் கவிதை மீது மிகுந்த விருப்பமுண்டு. அதனால்தான் நான் நாடகங்கள் நடத்திக்கொண்டிருந்த காலத்தில் முழுக்க முழுக்கக விதைவடிவிலேயே களங் கண்ட கவிஞன் என்ற நாடகத்தை நடத்தினேன். (தொடரும்)



## தவக்கால சிந்தனை

"ஆண்டவரே! நீர் எம் குற்றங்களை மனத்தில் கொண்டிருந்தால் யார் தான் நிலைத்து நிற்க முடியும்"

"வரலாற்றில் இயேசுவின் பெயரை வணங்கியவர்கள் ஏராளம். அவரையோ அவரது போதனைகளையோ புரிந்து கொண்டவர்கள் சிலரே! அவரையும் அவரது போதனைகளையும் தம் வாழ்வில் கடைப்பிடித்தவர்கள் மிகச் சிலரே!" என்கிறார் ஆல்பர்ட் நோலன். இயேசுவின் போதனைகளில் மனித மனத்திற்கு கடினமானதாக. கசப்பான மருந்தாகப்படுவது இன்றைய நற்செய்தியில் வரும் போதனையாகும்.. கடன் வாங்கியாவது கடவுளுக்கு பலிசெலுத்துவது எளிது. ஆனால் கருகிக் கிடக்கும் உறவுகளை துளிர்க்கச் செய்வது எத்துணை கடினம்! ஆனால் இயேசுவோ "உறவை சரிப்படுத்து அதன பின் பலிசெலுத்து" என்கிறார். தவக்கால முயற்சிகளில் நாம் முதன்மைப்படுத்துவது எவற்றை திருப்பயணங்கள், சிலுவைப்பாதைகள். திருவிழிப்பு செபங்கள், உண்ணா நோன்புகள். இன்னும் பல! இயேசுவின் குரலுக்கு சற்றேசெவிமடுப்போம். நம் சகோதர உறவை நாம் வலுப்படுத்தவில்லையென்றால் இந்தச் செயலபாடுகள் இறைவனுக்கு நெருக்கமாக நம்மைக் கொண்டு செல்லுமா?

காவலன்

# செய்தித் துளிகள்

### மெய்வல்லுநர் போட்டி

கைதடி நபீல்ட் செவிப்புலன், கண்புலன் அற்றோர் பாடசாலை யின் 2006ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளைசனிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடியிலுள்ள பாடசாலை மைானத்தில் நடைபெறும்

இந் நிகழ்வில் ஏ.ரவீந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (து)

### கலைமுகம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின்



கலைமுகம் சஞ்சிகை இதழ் - 42 சிறப்புமிக்க கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் எனப் பல ஆக்கங்களைஉள்ளடக்கியதாக வெளி வந்துள்ளது. (த-132)

### கட்டடம் இடிந்ததில் ஒருவர் பலியானார்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக் கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனை பல்கலைக் கழகத் தின் விவசாய பீடத்திற்கு அருகாமையிலேயே இப் புதிய கட்டடம் அமைக்கப்படுகின்றது. (த-9)

### வருடாந்த பொதுக்கூட்டம்

(நல்லூர்)

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய மாதர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புது வருட நிர்வாகிகள் தெரிவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பாரதி மன்ற சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நிலையச் செயலாளர் வ. அன்பழகன் தெரிவித்துள்ளார். (த-134)

### தராசுகளுக்கு முத்திரையிடல்

நல்லூர் பிரதேச சபை உப அலுவலக பிரிவில் தற்போது தராசுகளுக்கு முத்திரையிடப் பட்டுவருவதால் வர்த்தகர்கள் தவறாது தமது தராசுகளுக்கு முத்திரையிடுமாறு நல்லூர் பிரதேச சபை பொறுப்பதிகாரி தி. தவராஜா கேட்டுள்ளார். (த-132,133)

### பற்பசை,தூரிகை வழங்கல்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் 5வயதுக்குட் பட்ட குழந்தைகளுக்கு பற்பசை தூரிகை என்பன வழங்கப்படவுள்ளன. நாளை சனிக்கிழமை சாவகச்சேரி பிராந்திய சுகாதார பணிமனையில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சிவசுப்பிர மணியம் தலைமையில் இந் நிகழ்வு நடை பெறும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-108)

### கூட்டம்

யாழ். சுக வாழ்வு நிறுவனத் தின் செயற்குழுக்கூட்டம் நாளை சனிக் கிழமை நிறுவனத்தின் தலைவரும் பணிப்பாளருமான அருட்தந்தை எஸ்.டேமியன் தலைமையில் நடை பெறவுள்ளது.

அனைத்து செயற்குழு உறுப் பினர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின் றனர். (த-134)

### ஆன்மீக நிகழ்வு

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் ஆன் மீக நிகழ்வுத் தொடரில் இன்று மு. ப.10 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ். இந்துக் கல்லூரி மாணவர்க ளின் இசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. (த-35)

### டெட்டனேட்டர்களுடன் ஒருவர் கைது!

(கொழும்பு)

சக்தி வாய்ந்த எரிபொருள் அடங்கிய 7டெட்டனேட்டர்களுடன் ஒருவரை கொடக்கவெல பொலிஸார் கைது செய்துள்ளனர். கொடக்கவெல கொஸ்வெட்டிய எனும் இடத்தில் இச்சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

கொடக்கவெலப் பொலிஸ் நிலையத்துடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள புலனாய்வு மற்றும் தீரத குற்றச் செயல் விசாரணை பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (த)

### கடற்படை அதிகாரிகள் சீனாவுக்குப் பயணம்

(கொழும்பு)

இலங்கை கடற்படைக்கு சீனாவின் உதவியை பெறுவதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் கடற்படை அதிகாரி சரத் ரத்ன கீர்த்தி ஆகியோர் பீஜிங் புறப்பட்டனர்.

அதிகாரிகளுடன் நடத்துகிற கடற்படையினருக்கான பயிற்சிகள் உள்ளிட்டவற்றை பெறுவதற்காக சீனக் கடற்படை அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதி காரிகளை இருவரும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

அரசாங்கம் எப்போதும் சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் உள்ளது. ஆனால் விடுதலைப் புலிகள் தங்களின் பலத்தை வலுப் படுத்தும் போது அரசாங்கத்தினால் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று அரசாங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித் துள் ளார்.

சீன பயணத்தின் போது பாது காப்பமைச்சின் செயலாளர் சீனாவின் பிரதிப் பாதுகாப்பமைச்சரையும் சந்திக்கவுள்ளார். (ச)

### வருடாந்த உற்சவம்

(மருதங்கேணி)

புலோலி புனித சூசையப்பர் தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை இரவு திருச்சொரூப சுற்றுப் பவனியும் அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலி பூசை யும் இடம்பெறவுள்ளது. (த-35)

# கிறிஸ்தவ தேவாலயத்தின் கூரை இடிந்து வீழ்ந்தது

## 26பேர் பலி; 86 பேர் காயம்

(உகண்டா)

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் கூரை இடிந்து விழுந்ததில் 26 பேர் உயிரிழந்துள்ளார்கள்.



தேவ ஆராதனை இடம்பெறும் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடும் மழை பெய்ததால் கூரை இடிந்துவிழுந்துள்ளது என்றும் இதனால் 86பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேவ ஆராதனை இடம்பெறும் போது தேவாலயத்தில் எத்தனை பேர் இருந்தனர் என்பது பற்றிய தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

மேலும் பலர் இடிபாடுகளுக்கிடையில் சிக்கியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (த-9)



அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் 15ஆம் திகதி கொமன்வெல்த் போட்டிகள் தொடங்கவுள்ளன. இதையொட்டி நடந்த ஒத்திகை நிகழ்ச்சியில் யாரா நதியில் பல்வேறு மீன் வடிவங்களின் மிதவைகள் அணிவகுப்பு நடந்தது.

# காஷ்மீர் பிரச்சினையில் தலையிட இங்கிலாந்து மறுப்பு கூறியது

(லண்டன்)

அமெரிக்காவைத் தொடர்ந்து காஷ்மீர் பிரச்சினையில் தலையிட இங்கிலாந்தும் மறுத்துவிட்டது. இது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் விடுத்த கோரிக்கையை இங்கிலாந்து பிரதமர் பிளேயர் நிராகரித்தார்.

பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அசிஸ் இங்கிலாந்தில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு அந் நாட்டுப் பிரதமர் டொனி பிளேயரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, இந்தியாவுடனான காஷ்மீர் பிரச்சினையில் இங்கிலாந்து மத்தியஸ்தராக செயல்பட வேண்டும் என்று சவுகத் அசிஸ் வற்புறுத்தினார். மேலும் இருதரப்பு உறவு மற்றும் தீவிரவாதத்துக்கு எதிரான போர் பற்றி இருவரும் பேசினர்.

அதன்பிறகு இருவரும் நிருபர்களுக்கு கூட்டாக பேட்டியளித்தனர். அப்போது பிளேயரிடம், காஷ்மீர் பிரச்சினையில் இங்கிலாந்தும்-அமெரிக்காவும் மத்தியஸ்தராக செயற்படுமா? என்று கேட்கப்பட்டதற்கு காஷ்மீர் பிரச்சினையில் தலையிடும் எண்ணம் இல்லை என்பதை அவர் சூசகமாக கூறினார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண, இந்தியாவும்-பாகிஸ்தானும் மேற்கொண்டு வரும் சமரச முயற்சிகளை மட்டுமே ஆதரிப்போம் என்று அவர் அப்போது தெரிவித்தார். முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் பாகிஸ்தான் சென்றபோது, அந் நாட்டு அதிபர் முஷரப்பும், காஷ்மீர் பிரச்சினையில் தலையிடுமாறு வற்புறுத்தினார். ஆனால் புஷ் அதை நிராகரித்துவிட்டார்.

காஷ்மீர் பிரச்சினையில், அமெரிக்காவும் அதைத்தொடர்ந்து இங்கிலாந்தும் கைவிரித்து விட்டதால் பாகிஸ்தான் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளது. (தி)

உலக தரிசனம்

# அணுசக்தி விவகாரம் தொடர்பில் ஈரானுக்கு மேலும் நெருக்கடி

(வோஷிங்டன்)

ஈரான் நாடு அணுசக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு பயன்படுத்தாமல், அணுகுண்டு தயாரிக்க முயற்சி செய்வதாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது. இது பீற்றி வியன்னாவில் சர்வதேச அணுசக்தி கழகம் விவாதம் நடத்தி வருகிறது. ஈரான் பிரச்சினை ஐ.நா. பாதுகாப்பு சபை கவுன்சிலுக்கு அனுப்பப்படுமா? என்பது இந்த கூட்ட முடிவில் தெரியவரும்.

இந்நிலையில், சர்வதேச அணுசக்திக் கழக கூட்டத்தில் ரஷ்யா ஒரு புதிய திட்டத்தை முன்வைத்ததாகக் கூறப்படுகிறது. அதில் ஈரான் நாடு சிறிய அளவில் யுரேனியத்தை செறிவூட்டிக் கொள்வது என்றும், அதற்குத் தேவையான முக்கிய பணிகள் மற்றும் அணுக் கழிவுகள்ள ரஷ்யா கையாள்வது என்றும் யோசனை கூறப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் அமெரிக்கா இந்தத் திட்டத்தை அடியோடு நிராகரித்துவிட்டது. ரஷ்ய வெளியுறவு மந்திரி செர்ஜி லாவ்ரோ நேற்றுமுன் தினம் வாஷிங்டனில் அமெரிக்க வெளியுறவு மந்திரி கொண்டலிசா ரைசை சந்தித்துப் பேசினார். அப்போது, அணுகுண்டு தயாரிப்பில் முக்கிய மூலப்பொருளாக விளங்கும் யுரேனியத்தை ஈரான் செறிவூட்டுவதை எந்த வகையிலும் அனுமதிக்கமுடியாது என்று அமெரிக்க மந்திரி திட்டவட்டமாக தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மேலும் ஈரான் இராணுவத்தினர் எந்த முகாந்திரமும் இல்லாமல் ஈராக் நாட்டுக்குள் புகுந்து, அந் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அமெரிக்க தரப்பில் புதிதாக புகார் கூறப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தை பற்றி ரஷ்ய மந்திரி செர்ஜி லாவ்ரோ ஈரான் குறைந்த அளவில் யுரேனியத்தை செறிவூட்ட அனுமதிக்கலாம் என்று யோசனை தெரிவித்ததாக கூறப்படுவதை மறுத்துள்ளார். இதுபோல ரஷ்ய மந்திரி எந்தப் புதிய திட்டத்தையும் கூறவில்லை என்று அமெரிக்க மந்திரி கொண்டலிசா ரைசும் கூறியுள்ளார்.

ஈரான் அணுசக்தி பிரச்சினையை சுமுகமாக தீர்க்க ரஷ்யா தீவிரமுயச்சி செய்து வருகிறது. ஆனால் அந்த நாடு தெரிவித்ததாகக் கூறப்படும் யோசனையை அமெரிக்கா அடியோடு நிராகரித்துவிட்டால், ஈரானுக்கு நெருக்கடி மேலும் அதிகரித்து இருப்பதாக சர்வதேச வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர்.

யுரேனியத்தை மிகச் சிறியளவில் செறிவூட்டுவதன் மூலம் அணு ஆயுதங்கள் தயாரிக்க முடியாது என்று ஈரான் கூறிவருவது குறிப்பிடத்தக்கது. (தி)

# வாங்கிய கடனுக்காக மனைவியை தாரைவார்த்தார் கணவர்

(காத்மாண்ட்)

கடன் பாக்கிக்காக மனைவியை தாரை வார்த்தார் கணவர். இந்த நூதன சம்பவம் நேபாளம் நாட்டில் நடந்துள்ளது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

நேபாளத்தில் சப்தகிரி மாவட்டத்திலுள்ள கன்சன்புர் கிராமத்தைச் சேர்ந்தவர் சிகிடிலால்யாதவ் 2 தடவை திருமணம் செய்து மனைவியை இழந்தவர். எனவே 3வது தடவை திருமணம் செய்ய விரும்பினார்.

இதை அறிந்த ருப்நகர் கிராமத்தைச் சேர்ந்த சீதாராம் என்பவர் திருமணத்துக்கு பெண் பார்த்துத் தருவதாகக் கூறி சிகிடிலால் யாதவிடம் இருந்து ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினார். கடன்வாங்கி பல மாதங்கள் ஆகியும் சீதாராமனால் சிகிடிலாலுக்கு மணப்பெண் தேடிக் கொடுக்க இயலவில்லை.

இதையடுத்து ஆயிரம் ரூபாயைத் திருப்பித் தருமாறு சிகிடிலால் தினமும் சீதாராமிடம் தொல்லை கொடுத்தார்.

இதனால் வெறுப்படைந்த சீதாராம் கடன் தொகைக்காக தன் முதல் மனைவி பிஸ்னு மாயாவை சிகிடிலால் யாதவுக்கு தாரைவார்க்க முடிவு செய்தார். கடனுக்காக தன் மனைவியை திருமணம் செய்துகொள்ளும்படி அவர் சிகிடிலாலிடம் கேட்டுக்கொண்டார். இதை சிகிடிலால் ஏற்றுக்கொண்டார்.

இதைத்தொடர்ந்து சிகிடிலால்-பிஸ்னு மாயா திருமணம் நடந்தது. சிகிடிலாலை திருமணம் செய்வது மகிழ்ச்சி அளிப்பதாக பிஸ்னுமாயா கூறியுள்ளார். (தி)

## பட்டினி, போர், தீவிரவாதத்தால்

# பாதிப்புறும் மக்களுக்கு உதவ ஐ.நா. அதிரடிப்படை


## உருவாக்கக் கோருகிறார் கோபி அனான்

பட்டினி, போர் மற்றும் தீவிரவாதச் செயல்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ 2500பேர் கொண்ட ஐ.நா. அதிரடிப் படையை உருவாக்கவேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் யோசனை தெரிவித்துள்ளார்.

இரண்டாவது முறையாக பொதுச் செயலாளர் பதவி வகிக்கும் அனானின் பதவிக் காலம் இந் தாண்டு இறுதியில் நிறைவடைகிறது.

இந்நிலையில் ஐ.நா. பொதுச் சபை யில் கடந்த செவ்வாய்க்கிழமை அறிக்கை தாக்கல் செய்து அவர் உரையாற்று கையில்,

ஐக்கிய நாடுகள் அமைப்பில் மிகப் பெரிய அளவுக்கு சீர்திருத்தம் தேவை. உலகின் பல்வேறு நாடுகளில் ஐ.நா. தனது பணியை ஆற்றி வருகிறது. ஐ.நாவின் சில பணிகளை, பணி ஒப்படைப்பு முறை மூலம் பிறநாடுகளிடம் ஒப்படைக்கலாம்.



மேலும் தகவல் தொடர்பு அமைப்பை நவீனப்படுத்த வேண்டும். ஐ.நாவின் அமைதி காக்கும் படை உட்பட பல்வேறு படைப்பிரிவுகளுக்கு, ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப் படும் தொகையில் 70 சதவீதம் செலவிடப்படுகிறது. 10 ஆண்டுகளுக்குமுன்பு அது 50 சத வீதமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது என்றார். (தி)

# காசியில் குண்டுவெடிப்பு ஆஸி. பிரதமர் கண்டனம்

காசியில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹாவர்டு கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னை ஐஐடியில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசும் போது, காசி குண்டுவெடிப்பு சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் தெரிவித்தார்.

பயங்கரவாதம் நவீனகால அபாயமாகவுள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராட அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (தி)

# அமெரிக்கா கண்டனம்

(வோஷிங்டன்)

காசியில் இரண்டு இடங்களில் குண்டுகள் வெடித்து 20பேர் இறந்த சம்பவத்துக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு செய்தித் தொடர்பாளர் சியான் மெக்கார்மாக் இதுதொடர்பில் கூறுகையில்,

இந்த சம்பவம் தீவிரவாதச் செயலாகும். இந்த செயலை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம். இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் நலம் பெறவேண்டுகிறோம். இந்தக் குண்டுவெடிப்பில் அமெரிக்கர்கள் யாரும் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பது தெரியவில்லை என்றார். (தி)

# தனியார் நிறுவன ஊழியர்கள் தீவிரவாதிகளால் கடத்தல்

(பக்தாத்)

ஈராக்கில் பக்தாத் நகருக்கு கிழக்கே தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று செயற்பட்டு வந்தது. இங்கு பொலிஸ் உடையில் தீவிரவாதிகள் வந்தனர். அவர்கள் அங்கிருந்த ஊழியர்கள் 50 பேரை சுற்றி வளைத்துக் கடத்திச் சென்றனர்.

அவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை. அவர்களை தீவிரவாதிகள் கொன்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதற்கிடையே பக்தாத் அருகே இன்னொரு இடத்தில் ஒரே இடத்தில் 20 ஆண்கள் பிணமாகக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந்தனர். இதில் சிலரை தூக்கிலிட்டு கொன்றிருந்தனர். மற்றவர்கள் கழுத்தை நெரித்தும் துப்பாக்கியால் சுட்டும் கொல்லப்பட்டிருந்தனர். பிணம் கிடந்த இடம் சன்னி முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியாகும். அவர்கள் ஷியா முஸ்லிம்களை கடத்தி வந்து கொலை செய்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (தி)

சமாதானத்திற்காக சண்டை பிறப்பிக்காமல் சண்டைக்காக சமாதானத்தைப் பிறப்பிக்கும் மனிதன் புத்திசாலியல்ல. -பிளேட்டோ

வலம்புரி

## ரணிலின் நோர்வேப் பயணம் சமாதானத்திற்கு ஒத்துழைப்புத் தருமா?

ஜெனீவாப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேக்குச் செல்லவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுடன் போட்டியிட்டு குறைந்தளவு வாக்குகள் வித்தியாசத்தில் ரணில் விக்கிரமசிங்க தோல்வி கண்டிருந்தார். ரணிலின் தோல்வி அவருக்கு அரசியல் துறவை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் அரசியல் வட்டாரங்களில் ஏற்பட்டதும் உண்டு.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் சந்தித்த தோல்வி அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்கனவே கருக்கட்டியிருந்த எதிர்ப்பை மேலும் வலுப்படுத்தியது.

கட்சியின் தலைமைப்பதவிக்கு ரணில் பொருத்தமானவர் அல்ல என்ற கருத்து மேலோங்கிய போது அரசியல் துறவை மேற்கொள்ளப் போவதாகவும் வெளிநாடொன்றில் குடியிருக்கப் போவதாகவும் ரணில் கதை விட்டார்.

அட! யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு அரச தரப்பில் காரணமாகவிருந்த ரணில் விக்கிரமசிங்க அரசியல் துறவு பூணுவதை ஜீரணிக்க முடியாது அதைவிட வேதனை தரக் கூடிய விடயம் வேறு எதுவுமாக இருக்காதென்ற அனுதாப அலை ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்தது.

'அரசியல் துறவு' கொள்ளப்போவதாக ரணில் அவிழ்த்துவிட்ட கதை அவரது தலைமைப் பதவியினைக் காப்பாற்றியது. அரசியல் துறவு என்பதை தடுத்து ஐயா! நீங்களே ஐ.தே.கட்சியின் தலைவர். அதற்குப் பொருத்தமானவரும் நீங்களே என்றவாறு கட்சியின் ஆதரவாளர்கள் ரணிலிடம் சென்று வேண்டிக்கொள்ள அவரும் எதை எதிர்பார்த்தாரோ அது கிடைத்தவிட்ட மகிழ்வில் ஏற்றுக் கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் தனது தோல்விக்குக் காரணம் வடக்குக் கிழக்கில் வாக்களிப்பு இடம்பெறாமையே என்ற காரணத்தோடு தனது தோல்விக்கு சமாதானம் கூறிய ரணில் இப்போது தான் தொடக்கி வைத்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இறுக்கமாகவிருக்க வேண்டுமென நினைத்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவின் முயற்சியால் சமாதானம் ஏற்பட்டாலும் அதில் பாதி தனக்கு என்பதால் சமாதான முயற்சியில் ஏதோவொரு வகையில் தன்னையும் உட்படுத்திக் கொள்வதால் ரணிலின் முயற்சி அபாரமாகவேயுள்ளது.

அதன் ஒரு அங்கமே அவரின் நோர்வேப் பயணம். பரவாயில்லை, அப்படியாவது சமாதானம் ஏற்பட்டால் திருப்திதான் ஆனால் ரணிலின் நோர்வேப் பயணம் சமாதான முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒட்டுமொத்த ஆதரவினை பெற்றுத் தருமா? என்பதே கேள்வி.

# புலிகள் பலம் பெறுவதற்கு ஜே.வி.பி யே முழுக் காரணம்

## ரவி கருணா நாயக்க சாடல்



(கொழும்பு)

யுத்தத்தினால் வெல்ல முடியாத அளவிற்கு விடுதலைப் புலிகள் பலமடைந்துள்ளனர். இதற்குக் காரணம் ஜே.வி.பி.யே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பேச்சைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழம்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க சபையில் தெரிவித்தார்.

அலரிமாளிகையிலிருந்து கொண்டு தோசை, மசாலா வடை சாப்பிட்ட வண்ணம் ஜெனீவா பேச்சுக்கு உடன்பாடு தெரிவித்த ஜே.வி.பி. ஹெல உறுமய க் கட்சிகள் இன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஜெனீவாப் பேச்சையும் உடன்பாட்டையும் எதிர்ப்பதாக புதியதொரு நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள் .

சகல கட்சிகளுடனுடம் பேசவேண்டும் புலிகளுடன் மாத்திரம் பேசக்கூடாதென வலியுறுத்திய ஜே.வி.பி ஹெல உறுமய ஆகியன இன்று எந்த அடிப்படையில் இவ்வாறு செயற்படுகிறார்கள் தற்பொழுது அவர்களுடைய மூக்குடைந்துள்ளது. சந்திரிகாவை மாத்திரமே இவர்களால் மிரட்ட முடியும் மஹிந்த ராஜபக்ஷவை இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் அவர் கூறினார்.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இலங்கையிலிருந்து இந்திய இராணுவத்தை வெளியேற்ற வேண்டுமென ஜே.வி.பி. கோஷமெழுப்பி அன்று போராடியது இன்று அதன் விளைவுகளை நாடு அனுபவிக்கின்றது. விடுதலைப் புலிகள் வெல்லப்பட முடியாத ஒரு பலம் பொருந்திய சக்தியாக வளர்வதற்கு இந்தியப் படையினரின் வெளியேற்றமே காரணமாகும்.

நோர்வே அனுசரணையாளர்களை பணியிலிருந்து விலக்க வேண்டும் அவர்களை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என விமல் வீரவன்ஸ முழக்கமிட்டார் மறுபுறம் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் யுத்தத்துக்குத் தயாரெனக் கூறி வருகிறார் இந் நிலையில் தேசிய அபி விருத்தியை குறிக்கோளாகக் கொண்ட இத்தகைய சட்டமூலங்களைக் கொண்டு வருவதால் எவ்வித பயனு மில்லை.

நாட்டில்யுத்தத்தை இல்லாதொழித்து நிரந்தர சமாதானத்தைமலரச்செய்யும் பட்சத்திலேயே இந்த சட்டங்களின் பயன்பாடு அர்த்தமுடையதாகும் என்பது உறுதி. அதனை விடுத்து அதிகார சபைகளை ஏற்படுத்துவது வெறும் கால வீணடிப்பேயாகும் அத்துடன் இம் முயற்சியானது மக்க ளின் பண்த்தை விரயமாக்கும் ஒன்று என்றே நாம் கருதுகிறோம்.

முதலீட்டுச் சபை உட்பட அரச திணைக்களங்கள் சோம்பேறித்தனத்துடன் இயங்குவதைத் தடுத்து செயற்திறன் வாய்ந்த அமைப்பாக அவற்றை மாற்றவேண்டும். பொருளாதார யுத்தத்தை தோல்வியடையச் செய்யாவிடின் அனைத்து விடயங்களும் தோல்வியையே தழுவும் என்ற யதார்த்தத்தை சகலரும் உணரவேண்டும்.

அந்நிய நாட்டு சக்திகள் நாட்டைச் சுரண்டுகிறார்கள் என கோஷமெழுப்பப்படுகிறது அப்படியென்றால் வெளி நாட்டு முதலீட்டைப்பெறுவுது எவ்வாறு என அரசாங்கம்தெளிவுபடுத்த வேண்டும். எமது முதலீட்டாளர்கள் வெளி. நாடுகளுக்குச் சென்று முதலிடுகிறார்கள் இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்து வரும் போது இந்த சட்ட மூலங்களால் என்ன பயன்?

தேசிய நலனே முக்கியம் என்பதை அரசதரப்பினர் உணர வேண்டும் என்றார். (து)

## 'மகநகும'வீதி அபிவிருத்தித் திட்டம்

## இரண்டாம் கட்ட வேலைகள் எதிர்வரும் 19இல் ஆரம்பம்

(கொழும்பு)

'மகநகும'எனப்படும் வீதி அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாவது கட்ட வேலைகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது.

இந்தவேலைகளை நாட்டின் பல பாகங்களில் தொடங்க விருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். இரண்டாவது கட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 180 கோடியை எட்டுகின்றது.

இந்த நிதியைப் பயன்படுத்தி கிராமிய வீதி வலைப் பின்னலின் 2ஆயிரம் கிலோ மீற்றர் நீளமான பகுதியைப் புனரமைக்க திட்டமிடப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்களையும், அபிவிருத்தித் திட்டங்களில் இணைந்துகொள்ள தீர் மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தித் திட்டத்தின் முதலாவது கட்டத்தைப் போன்றே இம் முறையும் ஒப்பந்தக்காரர்களை சம்பந்தப்படுத்திக்கொள்ள போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தேவையான நிதி பிரதேச பாராளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு அமைவாக ஒதுக்கப்பட விருப்பதும் குறிப்பிடத்தக்கது. (த-9)

## மகளிர் தினத்தை முன்னிட்டு— மக்கள் வங்கியின் புதுத்திட்டம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களிடம் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக மக்கள் வங்கியின் வைப்பின் பெறுமதியை இரட்டிப்பாக்கும் தனித்துமான சந்தர்ப்பத்தை வழங்கும் "வனிதா வாசனா இதுறும் பத்" சேமிப்புப் பத்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இச்சேமிப்பு சான்றிதழ்களை ரூபா 1000, ரூபா 5000, ரூபா 10000, ரூபா 25000, ரூபா 50000 என ஐந்து பெறுமதிகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

மார்ச் 8ஆம் திகதி முதல் ஏப்ரல் 8 ஆம் திகதி வரையுள்ள காலப் பகுதியினை மகளிர் மாதமாக மக்கள் வங்கி அறி முகப் படுத்தியுள்ளதுடன் 25000 ரூபா பெறுமதியான 'வனிதா வாசன இதுறும் பத்' ஒன்றை கொள்வனவு செய்து வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டால், அவர் வங்கியில் சிசு உதான அல்லது இறுசு உதான கணக்கொன்றைக் கொண்டிருக்கும் பிள்ளையொன்றின் தாயாராக இருந்தால் அப்பிள்ளையும் அதன் கணக்கிற்கு ரூ 1000பரிசாகப் பெறும் .

200 சான்றிதழ்களை விற்பனை செய்யும் கிளைகள் ஒவ்வொன்றும் சீட்டிழுப்பில் ஒரு வெற்றிச் சந்தர்ப்பத்திற்கு தகுதி பெறும். மேலதிகமாக விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு 100 சான்றிதழ்களுக்கும் சம்பந்தப்பட்ட கிளைகளுக்கு, கிளையொன்றுக்கு 10 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். ரூபா 25000, ரூபா50000 பெறுமதியான 'வனிதா வாசன இதுறும் பத்' கொள்வனவு செய்யும் பெண்கள் ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான அவசர விபத்துக்காப்புறுதி ஒன்றை பெறும் தகுதியினைப் பெறுவார்.

இச்சீட்டிழுப்பு ஏப்ரல் 14 ஆம் திகதி புதுவருட பிறப்பன்று சகல மக்கள் வங்கிக் கிளைகளிலும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (து-132,133)

## கிராமத்தை ஏமாற்ற இடமளிக்கமாட்டோம்

(கொழும்பு)

நாட்டை ஏமாற்றிய கூட்டமைப்புக்கு கிராமத்தை ஏமாற்ற இடமளியோம் என்ற தொனிப்பொருளில் ஐக்கிய தேசியக் கட்சி தனது உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எதிர்வரும் 18ஆம் திகதி கண்டியில் நடைபெற விருக்கும் பொதுக்கூட்டத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பமாகவிருப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-9)

## கற்றல் உபகரணம் வழங்கல்

(மருதங்கேணி)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இவ் வைபவம் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ். சுகாதார பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.நந்தகுமார் ஆகியோர் கற்றல் உபகரணங்கள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி, ரிவி பிளேயர் ,புறஜெக்ரர் ஆகியவற்றை வழங்கினர். (த-35)

## இலவச மருத்துவமுகாம்


(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்தும் இலவச மருத்துவ முகாம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது கண், பல், நீரிழிவு, இரத்த அழுத்தம், சரும வியாதி பரிசோதனை ஆகியவற்றோடு கண் வைத்திய நிபுணரின் சிபார்சுக்கமைய இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படவுள்ளது. (து-21)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



மற்றவர்கள் மீது அன்பு செலுத்துவது நம் முடைய நல்ல பண்பை வளமடையச் செய்யும். நம்மையும் முழு மனிதனாக வாழவைக்கும் நம்மிட முள்ள கோபம், பொறாமை அற்பத்தனம் ஆகியவற்றை அடியோடு விரட்டியடிக்கும் அன்பு வாழ்வைப் பாலைவனமாக் காது மாறாக பூஞ்சோலை ஆக்கும்.

சுவாமி விவேகானந்தர்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கான நிவாரண கொடுப்பனவு இன்று முதல் வழங்கப்படவுள்ளதாக இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிவித்துள்ளார்.

இன்று மாலை 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நாளை காலை 10 மணிக்கு மருதங்கேணி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையிலும் வைத்து இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவை பெறவருவோர் உரிய ஆவணங்களின் மூலப்பிரதிகளை எடுத்து வருமாறு த.மகா சிவம் கேட்டுள்ளார்.

(ச-132,133)

## தென்மராட்சியில் இராமகிருஷ்ணர் ஜயந்தி விழா

யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இன்று காலை 10 மணிக்கு மேற்படி இராமகிருஷ்ணர் ஜயந்தி விழா பாடசாலை அதிபர் திரு.கு.சிவானந்தம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் பருத்தித்துறை இராமகிருஷ்ண -சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுவதுடன் வித்தியாலய மாணவர்களுக்குப் பயன்படத்தக்க பல நூல்களை அன்பளிப்பாக வழங்குவார்.

ஆசிரியர்கள், மாணவர்களது சொற்பொழிவுகளும் இவ் விழாவில் இடம்பெறும்.

(c-222)

# மதிலுடன் மோதிய கவச வாகனம்

(துன்னாலை)

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவக் கவச வாகனம் ஒன்று கட்டுப்பாட்டையிழந்து மதிலை உடைத்து வீட்டினுள் புகுந்தது.

இதன்போது வீட்டின் மதில் முழுமையாகச் சேதமடைந்ததுடன் வீட்டு வளவில் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த சைக்கிள் ஒன்றும் சேதமடைந்தது.

. நட்டஈடு வழங்காது சம்பவ இடத்திலிருந்து இராணுவத்தினர் விலக முற்பட்டனர்.

அச் சமயம் அங்கு ஒன்று கூடிய மக்கள் இராணுவத்தின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து இவ்விடத்திற்கு விரைந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் வீட்டின் உரிமையாளருடன் சமரசம் பேசி மதிலை புனரமைத்துத் தருவதாக உறுதியளித்த பின்னர் அவ்விடத்திலிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

இதேவேளை புதிய சைக்கிள் ஒன்றினை வழங்குவதற்கும் இராணுவத்தினர் சம்மதித்துள்ளனர்.

(ச-101)

# தேர்தல் பணிகளில் 1,60,000 ஊழியர்கள்

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகளில் சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடவுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாடாளாவிய ரீதியில் 10 ஆயிரத்து 500 வாக்களிப்பு நிலையங்களும் 1350 வாக்குகள் எண்ணும் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளதாகவும் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (04)

## அமைச்...

அரசாங்கத்துடன் இணங்கிச் செயற்படாமை மற்றும் மகிந்தவின் சிந்தனைக்கு எதிராகச் செயற்படுதல் போன்றகாரணங்களினையடுத்து சில அமைச்சர்களின் பதவி களைப் பறித்து நெருக்கமான சிலருக்கு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

## யாழ்.பல்கலை...

குமாரவடிவேல், கந்தசாமி ஆகியோ ருடன் பேராசிரியர் ரட்ண ஜீவன் கூலும் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தராக பேராசிரியர் கூலை நியமிப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தகது. (ச-4,5)

## கட்டுத்...

காலில் படுகாயமடைந்த நிலை யில் மயக்கம் அடைந்து காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காமையினால் அவர் மரணமடைந்தார்.

(ச-108)

## அதிகாரப்...

எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வுகாண முன்வந்தால் அவரது அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து விடும் இது தான் யதார்த்தமாகும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத்தெரிவித்தார்.(ச-4)

## மட்டக்களப்பில்...

இருவரும் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ச-9)

## சமாதான...

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளு மன்றத்தில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச நோர்வே அரசு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டினார்.

அதன் ஒரு கட்டமாகவே விடுதலைப்புலிகளை தமது நாட்டிற்கு அழைத்த நோர்வே அரசு அவர்களுக்கு கௌரவம் அளித்து அனுப்பியுள்ளது.

இதனை அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது எனவும் நோர்வேயை அனுசரணைப் பணியிலிருந்து நீக்கவேண்டுமெனவும் கோரியிருந்தது. இதற்கு நேற்றுப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் எவர் எந்தக் கருத்தை வெளியிட்டாலும் அனுசரணைப் பணியாளர்களாக நோர்வே அரசாங்கமே தொடர்ந்து இருக்கும் என்றும் அதில் எந்த வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் கூறினார்.

அத்துடன் நோர்வே மீது நம்பிக்கை இருப்பதால் வேறு எந்த நாட்டவரையும் அனுசரணையாளர்களாக இணைக்க அரசாங்கம் முயற்சிக்காது எனவும் கூறினார்.

இது இவ்வாறிருக்க சில கட்சி உறுப்பி னர்கள் அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுவதன் மூலமே தமது பொழுதைக் கழிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ச-4)


CARITAS-HUDEC JAFFNA

CARITAS HUDEC

# VACANCY

## 1. Livelihood Field Officer

To work in full partnership with the Caritas - Hudec Livelihood Program Manager & Livelihood Program Expatriate Advisor

**Base Station:** Mullaitivu (2 positions)

**Main Duties:**

* Supervise and manage animators/social workers in identifying projects through a participatory process which are inclusive of a diverse group of individuals, including vulnerable groups.
* Assist the Livelihood program manager in coordination with Livelihood Advisor in conducting community participatory process in the area & responsibility of Caritas-Hudec.
* Manage to collect and assist in analysis of all data required
* Identify capacity building needs of animators/social workers and local partners.
* Organize trainings and workshops to build and improve capacities of the adove mentioned staff.
* Assist on the issue of livelihoods and income generating activities at district and divisional level coordination meetings with government, NGOs,UN organisations and the private sector.
* Prepare accurate and timely reports to supervisors.
* Assist to monitor and evaluate livelihood programs (fisheries, agriculture, small enterprises)

**Requirements:**

* Experience in high level of program quality in livelihood project design, implementation, monitoring and evaluating.
* Experience in Project Planning, Implementation, Monitoring and Evaluating.
* Excellent skill in monitoring implementation of program activities.
* Strong interpersonal and liaison skills.
* Computer literacy in WinWord, Excel and email software.
* Age between 25-40 years.
* Good knowledge of written and spoken English and able to prepare Monthly Progress Report.
* Good team player
* Good communication skills

Caritas -Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender. If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & latest by 17 March 2006

**Father Jeyakumar**
**Caritas - Hudec**
**14 Mathew's Road, Deogu Street, Jaffna** or **E.mail:hudec@sltnet.lk**

(c-221)








இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 10.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.